பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 21 வியாழக்கிழமை (06-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:284

## சாட்சிகளின்றி அலரி மாளிகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து!

### பண்டாரநாயக்கா மண்டபத்தில் இருதரப்பும் பரிமாற்றம்

கொழும்பு,செப்.6

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 'தகுதிகாண்' அரசாக ஆட்சியில் தொடர்வதற்கு வழிசெய்யும் விதத்தில் பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் காணப்பட்ட இணக்கம், மதத் தலைவர்கள், கல்விமான்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சாட்சிகளாக அமர்ந்திருக்க ,அவர்கள் முன்னிலையில் ஒப்பந்த வடிவில் கைச்சாத்திடப்படும் என இரு தரப்பினாலும் அறிவிக்கப்பட்டிருந்த போதும் -

ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2.15 மணிக்கு அலரி மாளிகையில் வெளியாரின் கண்ணில்படாமலேயே நடந்து முடிந்தது.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இருதரப்புகளினதும் செயலாளர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவர் என்றும் -

இந்நிகழ்வில் சாட்சிகளாகப் பிரமுகர்கள் கலந்துகொள்வர் என்றும் - முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வை ஒட்டிய செய்திகளைச் சேகரிப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான செய்தியாளர்களும் படப்பிடிப்பாளர்களும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்தனர்.

ஆனால் 'அலரி' மாளிகையில் வைத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலையில் 'ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் இன்று கூடுகிறது!

கொழும்பு,செப்.6

விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் கடந்த ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல், நாளை வெள்ளிக்கிழமை வரை ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றம், ஜனாதிபதியின் பிந்திய உத்தரவுப்படி மீண்டும் இன்று கூடுகின்றது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு ஜனாதிபதி விடுத்திருந்தார்.

அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் தகுதிகாண் அரசு குறித்து ஏற்பட்ட உடன்பாட்டுக்கு இணங்க, முன்னர் அறிவிக்கப்பட்டதற்கு ஒருநாள் முன்னதாகவே நாடாளுமன்றத்தைக் கூட்டும் புதிய அறிவிப்பை ஜனாதிபதி விடுத்திருந்தார்.

நாடாளுமன்றம் புதிதாகக் கூடும் போது வழக்கமாக ஜனாதிபதி ஆற்றும் கொள்கை விளக்க உரை இன்று இடம்பெறுமா என்பது குறித்து அரசுத் தரப்பு தகவல் ஏதும் வெளியாகவில்லை.

(ம-7)

# அமைச்சர்களைக் குறைக்க ஒரு வார கால அவகாசம்!



ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வாவும், பொ.ஐ.மு. செயலாளர் டி.எம்.ஜயரத்னவும் சிவப்பு நிறக் கோவையில் அடங்கியுள்ள ஒப்பந்தப் பத்திரத்தைப் பரிமாறிக் கொள்கின்றார்கள். நடுவில் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான.

## நேற்றைய ஒப்பந்தத்தை அடுத்து அரசுக்கு ஜே.வி.பி. நிபந்தனை

கொழும்பு,செப்ரெம்பர்6

**பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானதை அடுத்து, அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி, அமைச்சர்களின் எண்ணிக்கையை இருபதாகக் குறைப்பதற்கு எதிர்வரும் 12ஆம் திகதி வரை அரசுக்கு ஜே.வி.பி. கால அவகாசம் வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

ஜே.வி.பியின் நிபந்தனைப்படி அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் அரைவாசி பொதுநலன் கருதிய திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. நிபந்தனைப்படி அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும்போது பதவி இழக்கும் 24 அமைச்சர்கள் யார் என்பது குறித்து அரசுத் தரப்பு வட்டாரங்களில் பரபரப்பான உரையாடல்கள் நேற்று இடம்பெற்றதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம் -

நேற்று இருதரப்பு ஒப்பந்தம் பரிமாறப்படும் நிகழ்வு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சமயம், அதனை அமைச்சர்கள் எஸ்.பி.திஸநாயக்கா, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மஹிந்த விஜேசேகரா, ஜி.எல்.பீரிஸ், நந்தமித்ர எக்கநாயக்கா ஆகியோர் பகிஷ்கரித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## அமைச்சர்களைக் குறைப்பதில் அரசுக்குப் பெரும் நெருக்கடி!

கொழும்பு,செப்.6

ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைச்சர்களின் எண்ணிக்கையை இருபதாகக் குறைப்பதில் பொ.ஐ.மு. அரசு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரும் அடங்குகின்றனர். பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சர் பதவியையும் தொடர்ந்து ஜனாதிபதியே வைத்திருப்பார் என்பதால் அவரும் ஓர் அமைச்சராகக் கணக்கிடப்படுவார்.

எனவே, அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை இருபதாகக் குறைக்கும்போது ஜனாதிபதி, பிரதமர் நீங்கலாக மேலும் பதினெட்டு அமைச்சர்களையே நியமிக்க முடியும்.

அதிலும் தற்போது அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கூட்டணிக் கட்சிகளுக்கு ஆறு அமைச்சர் பதவிகள் வழங்கப்படுவது ஏற்கனவே ஓரளவு உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய அம்சங்கள்

கொழும்பு,செப்.6

★ பொலீஸ், தேர்தல், நீதிச் சேவை, பொதுச்சேவை ஆகிய விடயங்களைச் சுதந்திரமாகக் கையாள்வதற்கு அதிகாரமுடைய 4 ஆணைக்குழுக்களை நியமித்தல். (ஊடகவியல் ஆணைக்குழு குறித்து விவாதித்து முடிவு செய்தல்)

★ நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல்

★ ஒரு வருடத்தின் பின் (2002 டிசம்பரில்) காபந்து அரசு ஒன்றின் கீழ் தேர்தல் நடத்தல்.

★ சிறுபான்மை கட்சிகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டு வருதல்.

★ அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைத்தல்.

★ கீழ் மட்ட விவசாயிகளின் விவசாயக் கடன்கள் அனைத்தையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### உணர்ச்சி மேலீட்டில் ஜே.வி.பி. தலைவர்கள்

கொழும்பு,செப்.6

பொ.ஐ.மு. - ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்ட சமயமும் பின்னர் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்பட்ட சமயமும் ஜே.வி.பி. தலைவர்கள் பலர் உணர்ச்சி மேலீட்டால் கண்ணீர் சொரியும் நிலையில் இருந்ததாக இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஓர் அரசு ஆட்சியில் அமர்வதைத் தீர்மானிக்கும் நிலைக்குத் தங்கள் கட்சி வளர்ந்துள்ள வேளையில் கட்சிக்காக மரணித்த தங்கள் தலைவர் றோஹண விஜேவீரவையும், ஏனைய

(12ஆம் பக்கம் பார்க்க)

### புறக்கோட்டையில் பிரதி அமைச்சர் அடாவடித்தனம்

கொழும்பு,செப்.6

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் உள்ள தமிழ் வர்த்தகரொருவரிடம் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று அடாவடித்தனம் புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் பொலீஸார் தலையிட்டு பிரதி அமைச்சரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

வர்த்தகருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் பிரதி அமைச்சர் வர்த்தகரைத் தாக்க முற்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

### விவசாயக் கடன் ரத்து?

கொழும்பு,செப்.6

பொ.ஐ.மு. - ஜே.வி.பி உடன்பாடு நடைமுறைக்கு வந்ததை அடுத்து அரச வங்கிகள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட - இருபதாயிரம் ரூபாவுக்கு உட்பட்ட - சகல

(12ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணிப் புதைகுழிச் சந்தேகநபர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை

கொழும்பு,செப்.6

செம்மணிப் புதைகுழிப் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள படையினருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தெரிவித்தனர்.

செம்மணிப் புதைகுழிப் படுகொலை தொடர்பான விவகாரம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட சமயமே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படுகொலை தொடர்பான அறிக்கைகள் மற்றும் மீட்கப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் செவ்வாய் இரவு இளைஞர் சுட்டுக் கொலை

வவுனியா,செப்.6

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அவரின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு வவுனியா ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தில் பரவலாக இயந்திரத் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் மேற்படி கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதுடன் நெளுக்குளத்துக்கும் உலுக்குளத்துக்கும் இடையில் அமைந்துள்ள இராணுவ முகாம் பொறுப்பதிகாரியை இச்சம்பவம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

(ம-7)

## யாழ். சிறையில் இருக்கும் 13 இந்திய மீனவரையும் விடுவிப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 இந்திய மீனவர்களையும் விடுவிக்குமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளதை அடுத்து, எதிர்வரும் திங்கட்கிழமை அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ். நீதிமன்றம் மேற்கொண்டுள்ளது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகத் தெரிவித்து கடற்படையினரால் கடந்த சில மாதங்களில் 51 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# காணாமற்போனோர் விசாரணை மீண்டும் இன்று ஆரம்பமாகிறது

## சாட்சிகளுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இன்று தமது விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த விசாரணைகளின் முதற்கட்டமாக பின்வரும் 19 பேரின் உறவினர்கள், சாட்சிக்கு அழைக்கப்பட்டவர்கள் ஆகியோரை யாழ்.பொலீஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

★இராசையா சுதர்மன் (கோவை இல ஐ.ஆர்.247) இல.110 உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை, சந்திரன் சித்திரா (சாட்சி) இல.167 விபுலானந்தர் வீதி, அரியாலை.

★சர்வமணி இராசமணி (கோவை இல பி.220) வரணி, இராசமணி மதிவதனி, வேலுப்பிள்ளை பூரணம். (சாட்சிகள்) கொடிகாமம்.

★கதிரேசலிங்கம் கோணேஸ்வரன் (கோவை இல ஐ.ஆர்.250) இல 7/A, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, (ஜே/68 கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

★நவரட்ணம் யோகனேசன் (கோவை இல.ஐ.ஆர்.216) இல. 50/18, செட்டித்தெரு, நல்லூர். (இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்).

★லலிதா சண்முகநாதன் (கோவை இல.406) அரியாலை. (இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

★எஸ்.அரிபவானந்தன் (கோவை இல.ஐ.ஆர்.157) அண்ணாசிலையடி, கரணவாய், கரவெட்டி, நாகன் அரியகுட்டி (சாட்சி).

★ விஸ்வலிங்கம் பத்மநாதன் (கோவை இல.ஐ.ஆர்.155) கோயிலாக்கண்டி, கைதடி. (இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

★ சொலமன் அருள்நேசன் (கோவை இல.ஐ.ஆர்.பி I 9/44) தவசிக்குளம், மிருசுவில் (ஜே/327 கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.)

★ சண்முகநாதன் வசந்தன் (கோவை இல.ஐ.ஆர்.175) ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (புத்தூர்ப் பகுதி கிராமஅலுவலர் அழைக்கப்படுகிறார்.)

★ எஸ்.கணேசமூர்த்தி (கோவை இல.ஐ.ஆர்.149) சிவரூபன், சுரேஸ்குமார், மாரிமுத்து தங்கவேலு (சாட்சிகள்) (இப்பகுதி கிராமஅலுவலர் அழைக்கப்படுகிறார்.)

★ ச.அற்புதநேசன் (கோவை இல. ஐ.ஆர்.150) பருத்தித்துறை, அற்புதன் - ஈஸ்வரி, ஜெயராஜ் (சாட்சிகள்)

★ இராமநாதன் அன்னலிங்கம் (கோவை இல. ஐ.ஆர்.175) மறவன்புலோ, சாவகச்சேரி. அன்னலிங்கம்-ஜெயலதா (சாட்சி) (இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.)

★ சுப்பிரமணியம் ஜெயநாதன் (கோவை இல. ஐ.ஆர் 64/99) அச்சுவேலி, செல்வபுரம், சுப்பிரமணியம் - தங்கப்பிள்ளை (சாட்சி) (கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.)

★ கந்தையா - திவாகரன் (கோவை இல. பிI 9/132) தொல்புரம் மத்தி, சுழிபுரம். (ஜே/168 கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

★ றொபேட் - கென்னடிராஜா (கோவை இல. பிI 9/145) இல.39, சாந்தசெபஸ்தியன் வீதி, குருநகர். இசாயாஸ், இமல்டா, இசாயாஸ் - ஜெயமேரி (சாட்சிகள்)

★ பரமு சந்திரசேகரன் (கண்ணன்) (கோவை இல. பிI 358) கடற்கரை வீதி, 4ஆம் ஒழுங்கை கொட்டடி. (ஜே/74 கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்)

★ இராசையா பாலசுப்பிரமணியம் (கோவை இல. ஐ.ஆர்.244) மவுண் கார்மல் வீதி, யாழ்ப்பாணம். (இப்பகுதி கிராம அலுவலர் அழைக்கப்படுகிறார்.)

★ கந்தசாமி செந்தீபன் (கோவை இல. பிI 9/144 மிருசுவில் கிழக்கு. கந்தசாமி - சதீபன் (சாட்சி). (க-4-ரி)

### மிருதிப் பணத்துக்கு தரமற்ற மரக்கறிகளை வழங்கும் வியாபாரிகள்

யாழ்ப்பாணம்,செப்.6

திருநெல்வேலி பொதுச்சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற வியாபாரிகள் சில்லறைப் பணம் இல்லை என்று கூறி மக்களின் தலையில் தரமற்ற மரக்கறிகளைக் கட்டிவிடும் தந்திரத்தைக் கடைப்பிடித்து வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக இவ்வாறான செயல் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் -

பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குச் செல்லும் மக்களிடம் சில்லறைப் பணம் இல்லை என்று கூறி 10ரூபா, 20ரூபாவுக்குத் தரமற்ற மரக்கறிகளைத் கட்டி அடித்து விடுவதாகவும் -

இதனால் தினமும் மரக்கறிகளை வாங்குவதற்குச் செல்லும் மக்கள் சில்லறைப் பணத்துடன் செல்ல வேண்டி உள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ம-10)

சர்வஜன வாக்கெடுப்புக்காக அச்சிட்ட

# வாக்குச்சீட்டுகளை அழித்துவிட முடிவு

கொழும்பு,செப்.6

அரசமைப்பு மாற்றம் குறித்து மக்களின் விருப்பத்தைப் பெறும் சர்வஜன வாக்கெடுப்பு ஜனாதிபதியால் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து அதற்காக அச்சிடப்பட்ட ஒரு கோடி 24 லட்சத்து 28 ஆயிரத்து 662 வாக்குச்சீட்டுக்களையும் அழிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்தத் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்காளர் அட்டைகளை வேறு ஒரு தேர்தலுக்குப் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்புக்காக பல கோடி ரூபா செலவிடப்பட்டிருந்தது என்றும் -

அது தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்றும்- அவர் மேலும் கூறினார். (ஐ-3)

மாணவியின் கைப்பை பறித்த சம்பவம்:

# 50 தோப்புக்கரணங்கள் போட்டார் இளைஞர்!

யாழ்ப்பாணம்,செப்.6

கோயிலில் வழிபட்டுக் கொண்டிருந்த மாணவியின் கைப்பையை பறித்துக்கொண்டோடிய இளைஞரைத் துரத்திப் பிடித்து, செய்த தவறுக்காக 50 தோப்புக்கரணங்கள் போடவைத்த சம்பவம் தொல்புரம் முத்துமாரியம்மன் கோயிலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அருகில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி வழிபட்ட சமயம் அந்த இளைஞர் மாணவியின் கைப்பையைப் பறித்துக்கொண்டோடியதாகவும் -

அந்தச் சமயம் கோயிலில் நின்ற வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் வேறு சிலரின உதவியுடன் அந்த இளைஞரைத் துரத்திப் பிடித்து கைப்பையை மீட்டதாகவும் -

தான் வேடிக்கையாகவே கைப்பையைப் பறித்ததாக அந்த இளைஞர் கூறியதை அடுத்து அவரைக் கோயிலில் 50 தோப்புக்கரணங்கள் போட வைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (க-ஒ)

# நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இளைஞனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட மகேந்திரநாதன் சங்கர் என்ற இளைஞர் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

வைத்திய பரிசோதனையின் பிரகாரம் தேவையேற்படின் அவர் வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெற அனுமதித்த நீதிவான் வைத்தியசாலையில் அவருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இவருக்குரிய பாதுகாப்பை வழங்குவதற்கு பொலீஸார் மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தின் கட்டளை உதாசீனம் செய்யப்பட்டது எனக் கருதி நீதிச் சேவை ஆணைக் குழுவினதும், சட்டமா அதிபரினதும் கவனத்துக்கு அது கொண்டு செல்லப்படும் எனக் குறிப்பிட்டு பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு கடிதம் ஒன்றினை அனுப்புமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ம-4-ரி)

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூலவளநிலையம் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூலவள நிலையம் ஒன்று நல்லூர் முத்திரைச்சந்தைப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கென 'யுனிசெவ்' ஸ்தாபனம் சுமார் 9லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிலையம் அமைக்கப்பட்டதும் முதலில் 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 45நாள் வதிவிடப் பயிற்சி நெறி அடுத்தமாதம், முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என்றும் -

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் -

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தெரிவித்தார். (ம)

வடமராட்சிக் கடலில்

# தொழிலில் ஈடுபடும் கட்டுமரங்களுக்கு இலக்கங்கள் பொறிக்க உத்தரவு

தென்மராட்சி,செப்.6

வடமராட்சிக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கட்டுமரங்களை இலகுவில் இனங்காணக்கூடிய வகையில் அவற்றுக்கு இலக்கங்கள் பொறிக்கப்படவுள்ளன.

பொலிகண்டி மேற்குத் தொடக்கம் தும்பளை கிழக்கு வரையிலான பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கட்டுமரங்களில் அந்தந்த முகாம்களின் பெயர்களும் இலங்கங்களும் கட்டுமரத்தில் தெரியக்கூடிய விதத்தில் எழுதுமாறும் -

இலக்கத்தைப் பலகையில் எழுதி கட்டுமரத்தின் முன்னும் பின்னும் தெரியக்கூடிய விதத்தில் கட்ட வேண்டும் எனவும் -

படையினர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து இப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுமரங்களுக்கு இலங்கங்கள் எழுதும் பணி நேற்றுமுன்தினம் கடற்றொழிலாளர் சங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

பருத்தித்துறைக் கடலில் அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாதகல் முதல் திக்கம் வரை இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் -

கடற்கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கட்டுமரங்களை முகாம்களுக்கு அண்மையில் நிறுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117-31)


# வாழ்த்துகின்றோம்



லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர்

**திருமதி கமலலோஜினி பரமசிவம்**

D.A.M. & S(HONS)

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாகப் பட்டம் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

*ஒளி விளங்கும் ஆயுர் வேதக்*
*கல்லூரி மேம்பாட்டிற்காய்*
*தெளிவு தரும் தலைமையில்*
*சிறந்த தோரதிபராகி*
*ஒளிவின்றி ஓய்வின்றி எம்மகத்தே*
*மருத்துவத்தைப் புகட்டும் நல்லாசானாகி*
*களி கொண்டு மக்கள் தொண்டாற்றவந்த*
*சமாதான நீதிபதியே வாழ்க வாழ்க!*

*ல.சி.ஆ.ம. கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.* - (91979)

மருத்துவக்கல்லூரி மாணவர்கள்.


வடமராட்சிக் குண்டுவெடிப்பை அடுத்து

# தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவரை உறவினர்கள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.6

அண்மையில் பருத்தித்துறைக் கடலில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்டுத் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 5 மீனவர்களையும் அவர்களது உறவினர்கள் நேற்றுப் பார்வையிட்டனர்.

இவர்களைப் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அலுவலகத்திற்குச் சென்ற மீனவர்களின் உறவினர்கள், மீனவர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க.நிஷாந்தன், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் ஆகியோர் பொலீஸ் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இந்த மீனவர்களை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-4-31)

### அடுத்த ஆண்டுக்கான பாடநூல்கள் நவம்பரில் விநியோகம்

2002ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடநூல்கள் இந்த வருடம் நவம்பர் மாதத்துக்குள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

இப்பாடநூல்களின் பதிப்பு வேலைகள் முடிவடைந்ததும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கப்பலில் எடுத்துவரப்படும் நூல்கள் யாவும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் மண்டபத்தில் களஞ்சியப்படுத் தப்படும் அங்கிருந்து யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் சகல கல்வி வலயங்களுக்கும் இரு வாரங்களுக்குள் அனுப்பிவைக்கப்படும் எனவும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-51)

### பரீட்சைநிலையங்களை பார்வையிட அதிகாரிகள் வருகை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெறும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்களைப் பார்வையிட யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளனர்.

இக்குழுவினர் நேற்றுமுன்தினம் தீவகம், வலிகாமம் ஆகிய பகுதிகளுக்கும் நேற்று வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளுக்கும் சென்று பரீட்சை நிலையங்களைப் பார்வையிட்டனர்.

இக்குழுவில் முன்னாள் அதிபரும், தொண்டமானாறு வெளிக்கள நிலையச் செயலாளருமான திருமதி எஸ்.பாலசிங்கம், திருமதி என். பாலசுந்தரம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர். (ம-117)


# கண்ணீர் அஞ்சலி

யா/சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையில்

தரம் I இல் கல்வி பயிலும் மாணவி

**செல்வி குணசீலன் பென்சிகா**

2001.09.02 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*

(C/18148)

## ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளிகள்
# முருகன், சாந்தன், பேரறிவாளனுக்கு செப்.18ஆம் திகதி மரணதண்டனை!

சென்னை,செப்.6

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும் எதிர்வரும் 18ஆம் திகதி சென்னைச் சிறைச்சாலையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



ராஜீவ்காந்தி 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி தமிழகத் தலைநகர் சென்னைக்குச் சமீபமாக உள்ள ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் ராஜீவ் உட்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.

ராஜீவ் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முருகனின் மனைவி நளினிக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் பெண் என்ற காரணத்தினாலும், அவரது குழந்தையின் எதிர்காலம் கருதியும், மரணதண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரும் இந்த மாதம் 18ஆம் திகதி தூக்கிலிடப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ராஜீவ் கொலை வழக்கில் சந்தேகநபர்களாக கைதுசெய்யப்பட்டிருந்த 26 பேருக்கும் 1998 ஆம் ஆண்டில் 'தடா' நீதிமன்றம் மரணதண்டனை விதித்திருந்தது.

இதனை எதிர்த்து செய்யப்பட்ட மேன்முறையீட்டில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. றோபேட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது. மற்றவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மரணதண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த ஊர்வலத்தில் காவடி எடுத்து வந்த பக்தர் ஒருவருக்கு தண்ணீர் தெளித்து களைப்பைப் போக்கும் காட்சி.

## சீக்கிய அமைப்பின் தலைவர் மரணதண்டனைக்கு எதிர்ப்பு

அமிர்தசரஸ்,செப்.6

ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளிகளுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி மரணதண்டனை நிறைவேற்றப்பட இருப்பதற்கு, பஞ்சாப் மாநில சிரோன்மணி அகாலிதளம் அமைப்பின் தலைவர் சிம்ரஞ்சித் சிங்மான் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக தலைமைச் செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் -

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தான் மரணதண்டனையை எதிர்ப்பதாகவும் - செப்ரெம்பர் 18ஆம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்போது, சென்னைச் சிறையில் தான் இருக்க விரும்புவதாகவும் - இதற்காக எதிர்வரும் 17ஆம் திகதி சென்னை வருவதாகவும் - சிம்ரஞ்சித் சிங்மான் குறிப்பிட்டுள்ளார்.

சிம்ரஞ்சித் சிங்மான் பஞ்சாப் தீவிரவாத அமைப்பில் அங்கம் வகித்ததும் - ராஜீவ் காந்தியின் தாயாரான இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த சமயத்தில், சீக்கியர்களின் புனிதத்தலமான பொற்கோயிலுக்குள் இராணுவம் நுழைந்து தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ)

## சரியான நேரத்தில் முடிவு எடுக்க தவறினால் பிரச்சினை எல்லைமீறும்
### இந்தியாவுக்கு குரியத் எச்சரிக்கை

கோழிக்கோடு,செப்.6

காஷ்மீர் பிரச்சினையில் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்காது விட்டால் பிரச்சினை கைகளை விட்டு மீறிவிடும் என்று குரியத் மாநாடு அமைப்பு இந்திய அரசை எச்சரித்துள்ளது.

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒரு சிறப்புக் கூட்டத்தில் குரியத் அமைப்பின் தலைவர் அப்துல் கனி லோன் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க, வெளிப்படையான, அர்த்தமுள்ள பேச்சுக்களை காஷ்மீர் மக்களுடன் மத்திய அரசு நடத்த வேண்டும் என்றும் -

வன்முறையினால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று தமது அமைப்புக் கருதவில்லை என்றும் -

அவர் குறிப்பிட்டார்.

இதேசமயம், ஜம்மு காஷ்மீர் பூஞ் மாவட்டத்தில் வெளிநாட்டுக் கூலிப்படையினர் 12 பேரைத் தாம் சுட்டுக்கொன்றதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது. (ஒ-9)

## இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட
# கச்சதீவை மீளப் பெறும்படி தமிழகக் கட்சிகள் வலியுறுத்தல்

சென்னை,செப்.6

இலங்கை அரசிடமிருந்து கச்சதீவை மீளப்பெற வேண்டுமென்று தமிழக சட்டப்பேரவையில் அனைத்துக் கட்சியினரும் ஒரே குரலில் வலியுறுத்தினார்கள்.

கடந்த மாதம் 29ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள், நடுக்கடலில் பழுதடைந்த தமது படகை பழுது பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில், அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் சுட்டதில் 6 மீனவர்கள் காயமடைந்தனர்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் தமிழக சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புப் பிரேரணை மீது உரையாற்றிய போது, கச்சதீவை மீண்டும் இந்திய அரசு மீளப் பெற வேண்டும் என்று கட்சி பேதமின்றி உறுப்பினர்கள் கோரினர்.

தமிழக மீனவர்கள் - குறிப்பாக இராமேஸ்வரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் - மீன்பிடிக்கச் செல்லும் போது, இலங்கைக் கடற்படையினரால் சுடப்படுவதும், வலைகள், படகுகள் சேதப்படுத்தப்படுவதும் நீண்டகாலமாக தொடர்வதாகவும் -

கச்சதீவை இலங்கையிடம் கையளித்த போது, அப்பகுதியில் தமிழக மீனவரின் உரிமைகள் நிலை நாட்டப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதாகவும் -

ஆனாலும் தற்போது, தமிழக மீனவர்கள் மீது இலங்கைப் படையினர் தாக்குதல்களை மேற்கொள்வதால் கச்சதீவை மீளப் பெற வேண்டும் என்றும் -

தமிழக சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

பிரேரணைக்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் இராஜேந்திரப் பிரசாத், தமிழக மீனவர்கள் தாக்கப்படுதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ஒ-9)

## சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள
# 8 வெளிநாட்டவர்கள் மீதான தலிபான் விசாரணை ஆரம்பம்

காபூல்,செப்.6

ஆப்கானிஸ்தானில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் தலிபான்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 வெளிநாட்டவர்கள் மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமானதாக தலிபான் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அந்த 8 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடைமுறைப்படுத்தியுள்ள இஸ்லாமிய 'ஷரியத்' சட்டப்படி, இஸ்லாமிய மதத்தைத் தவிர பிறமதங்களைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது மரணதண்டனைக்குரிய குற்றமாகும்.

இதனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றங்கள் நிருபிக்கப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டால் அவர்களைக் காப்பாற்ற சர்வதேச சமூகம், தலிபான்களிடம் வேண்டுகோள் விடும் சூழ்நிலை ஏற்படும் என்று கருதப்படுகிறது.

ஏற்கனவே புராதன புத்தர் சிலைகளை உடைத்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை தமது பக்கம் திருப்பிய தலிபான்கள் அத்தகைய ஒரு சூழ்நிலையை மீண்டும் உருவாக்கப் போவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட 8 பேரும், ஆப்கானிஸ்தானில் உதவிப்பணிகளை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு நிறுவனமான 'ஷெல்டரின்' பணியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## பலஸ்தீனரின் தாக்குதலுக்கு பிரிட்டிஷ் அரசு கடும் கண்டனம்

ஜெருசலேம்,செப்.6

ஜெருசலேத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்குப் பிரிட்டன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனர் ஒருவர் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் 15 பேர் காயமடைந்ததாக இஸ்ரேல் கூறியுள்ள போதிலும், 9 இஸ்ரேலியர்கள் உயிரிழந்ததாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை அடுத்து, கடந்த பதினொரு மாதங்களாக மேற்குக்கரை மற்றும் காஸா பிரதேசங்களில் பலஸ்தீனர்கள் மேற்கொண்டு வரும் வன்முறைகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி பலஸ்தீன அதிகாரிகளுக்கு பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் இடம்பெற்றுவரும் வன்முறைகளில் இதுவரை 700இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். (ஒ-9)

## ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கு; முன்னாள் சட்டமா அதிபர் வாதம்

புதுடில்லி,செப்.6

தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவி வகிப்பதற்கு எதிரான மனுக்கள் மீது நேற்றுமுன்தினம் இந்திய உச்ச நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பமானபோது, மாநில சட்டப் பேரவையில் உறுப்பினராகும் தகுதியை இழந்த ஒருவர், அமைச்சராகவோ, முதலமைச்சராகவோ நியமிக்கப்படக் கூடாது என்று மனுதாரர் சார்பில் ஆஜராகி சட்டத்தரணி வாதிட்டார்.

மனுதாரர்களில் ஒருவர் சார்பில் வாதிடிய முன்னாள் சட்டமா அதிபர், எஸ்.எஸ்.நாரிமென் இவ்வாறு தெரிவித்தார்.

மாநில சட்டப் பேரவையில் ஏற்கனவே உறுப்பினரல்லாத ஒருவரை அமைச்சராகவோ, முதலமைச்சராகவோ ஆளுநர் நியமிக்கலாம் என்றும் -

ஆனால் சட்டமன்ற உறுப்பினராவதற்கு தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஒருவரை அவ்வாறு நியமிக்கக் கூடாது என்றும் -

நாரிமென் வாதாடினார்.

வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ஒ-9)

## உலகக் கிண்ண போட்டிக்குத் தகுதி

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீனா, பராகுவே, பிரேஸில், ஈக்குவடோர் ஆகிய தென்னமெரிக்க நாடுகள் தகுதி பெற்றுள்ளன.

ஐரோப்பிய வலய நாடுகளிடையேயான தகுதிப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



யேமன் நாட்டின் ஏடன் துறைமுகத்தில் இரு படகுகளில் 108 இலங்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள படகில் ஒன்றையும், அகதிகளில் சிலரையும் படங்களில் காணலாம்.

## ஆந்திராவில் குண்டுவெடித்து 3 பேர் மரணம்!

ஹைதராபாத்,செப்.6

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலம் மேற்குக் கோதாவரி மாவட்டம் ஏலூர், ரயில் நிலையத்தில், நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 3 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 3 பேர் காயமடைந்தனர்.

ரயிலிருந்து பயணிகள் நிலையத்தில் இறங்கிக் கொண்டிருந்தபோது, குண்டு வெடித்தது. சம்பவ இடத்திலிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள் கண்டெடுக்கப்பட்டன. (ஒ)

# ஆசிரியர் குறை நிவர்த்தி சேவை
# இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 6

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி வலயங்களுடன் சேர்ந்து நடத்தவிருக்கும் ஆசிரியர்களுக்கான குறை நிவர்த்தி சேவை இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகவிருக்கின்றது.

இச்சேவையின் போது கல்வி வலயங்களைச் சார்ந்த கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக அதிகாரி ஆகியோருடன் சங்கத்தின் தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும், மாவட்டப் பிரதிநிதிகளும், கிளைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் என சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இக்குறைநிவர்த்தி சேவையின் போது பிரச்சினைகளை முன்வரே இனம் காண்பதற்காக சங்கத்தினால் வழங்கப்படவிருக்கும் விண்ணப்பப் படிவத்தினைப்பெற்று இரட்டைப் பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கடித மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்து விட்டு அதன்மற்றைய பிரதியை தாங்கள் கடமைபுரியும் பாடசாலைகளுக்குரிய சங்கத்தின் கிளைச் செயலாளர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் நல்லூரில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைப் பணிமனையிலும் —

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் வ. கணே சமூர்த்தி(அதிபர், நெல்லியடி அ.மி.த.க. பாடசாலை), க. சிவனேசன் (ஆசிரியர், மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை), பொ. அருணகிரிநாதன் (அதிபர், வேலணை சைவப் பிரகாச வித்தி.), திரு. எம். விஸ்வலிங்கம் (அதிபர் யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி) ஆகியோரிடமும் பெற்றுக் கொள்ளலாம். கல்வி வலய ரீதியாக குறை நிவர்த்தி சேவை நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ். கல்வி வலயத்தைச் சார்ந்த ஆசிரியர்கள் இம்மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னரும், ஏனைய கல்வி வலயங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும் விண்ணப்பப்படிவங்களை உரிய இடங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, பளை ஆகிய கோட்டங்களைச் சார்ந்தவர்கள் அருகில் உள்ளகிளைச்செயலாளர்களிடம் ஒப்படைக்கலாம்.

இந்த குறை நிவர்த்தி சேவையின் போது கல்வி வலயமட்டத்தில் தீர்க்கக் கூடியவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

வடக்கு —கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மட்டத்திலும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மட்டத்திலும், கல்வி அமைச்சு, ஓய்வூதியத் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கு சங்கத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் துணைப் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ஐ-3)

# கைதடிப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண் எங்கே?

## 10 மாதங்களாக அவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், செப். 6

கைதடிப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண் ஒருவரைக் கடந்த 10 மாதங்களாகக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைதடி வடக்கைச் சேர்ந்த காராளசிங்கம் மனோராம்பிகை என்ற மேற்படி பெண்ணும், கணவரும் கடந்த வருடம் மே மாதம் 17 ஆம் திகதி கைதடியில் இருந்து மக்கள் வெளியேறிய சமயம் அங்கு தங்கியிருந்ததாகவும் —

பின்பு கைதடிக்கு மக்கள் மீண்டும் செல்வதற்குப் படையினர் அனுமதித்த பின்பு குறிப்பிட்ட பெண்ணின் சகோதரன் அங்கு சென்ற போது கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்பு அவரைக் காணவில்லை என்று பெண்ணின் கணவன் தெரிவித்துள்ளார்.

சித்த சவாதீனமற்ற பெண்ணான இவர், வன்னிப் பகுதிக்குச் சென்றிருக்கக்கூடும் என எண்ணி அங்குள்ள உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் கடந்த மாதம் 11 ஆம் திகதிய (11-8-2001) ஈழநாதம் பத்திரிகையில் இவரைப் பற்றிய விவரங்களுடன் 'காணவில்லை' என்று விளம்பரமும் செய்யப்பட்டிருந்தது. எனினும் இதுவரை இது குறித்து தகவல் எதுவும் இல்லை என்று பெண்ணின் சகோதரனான இராமலிங்கம் குழந்தைவடிவேல் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

'ஈழநாதம்' பத்திரிகையில் வெளியான விளம்பரத்தின் போட்டோப் பிரதியையும் ஆணைக்குழு அலுவலகத்தில் அவர் ஒப்படைத்துள்ளார். (க-10)

# சாயி சிந்தனை

## தாயை மறப்பவர் எவரோ?

உங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யுங்கள். உங்களது தாயை மறவாதீர்கள். உலகில் இன்று கெட்ட மகன் இருக்கலாம். ஆனால் கெட்ட தாய் இருக்க மாட்டாள்.

நீங்கள் உங்களது Blood, Food, And Head இவற்றிற்காக உங்கள் தாய்க்குக் கடன்பட்டிருக்கிறீர்கள். அவள் செய்த தியாகத்திற்கு நீங்கள் என்ன நன்றி காட்டுகிறீர்கள்? அவள்தான் உங்களைப்போற்றிப் பாதுகாத்து வளர்த்தவள். ஆகவே உங்கள் தாயின் மேல் அன்பு செலுத்த மறக்காதீர்கள்.

முதலில் உங்கள் தாய், தந்தை ஆசிரியர் மற்றும் இறைவன்மேல் அன்பு காட்டுங்கள். தாய்தான் தந்தையைக் காட்டுகிறாள். தந்தை ஆசிரியரைக் காட்டுகிறார். ஆசிரியர் கடவுளைக் காண வழிகாட்டுகிறார்.

சமையற் கட்டில் வேலை செய்வதற்கு மட்டுமே பிறந்தவள்போல சிலர் மிகத்தாழ்வாகப் பெண்களை நினைக்கின்றனர். பெண்களால் நன்கு படிக்க முடியும். வேலைகளை ஏற்றுச் செய்ய முடியும். ஆனால் அவர்கள் தங்களது வீட்டுவேலைகளை அசட்டையாக விட்டு விடக்கூடாது.

தாய்மார்கள்தான் குழந்தைகளின் நலனுக்குப் பொறுப்பானவர்கள். உங்கள் தாயை எப்போதும் மறக்காதீர்கள். எந்த நிலையிலும் நல்லதோ, கெட்டதோ எதுவாயினும் உங்கள் தாயை மட்டும் மறவாதீர்கள்.

கலியுகத்தின் கொடுமையால் சிலர் தாயைச் சமையற் கட்டில் வேலை செய்யும் சமையற்காரியாக நினைக்கின்றனர். அதுமட்டுமல்ல வேலைக்காரியின் நிலைக்கும் கீழிறக்கி விடுகின்றனர். இது மனிதனுடைய துரதிருஷ்டம்.

தாயும், தாய் நாடும் வானுறையும் சுவர்க்கத்தையும் விட மேலானவை. ஒவ்வொருவரும் தன் தாயை மதித்து அன்பு செலுத்த வேண்டும். அவளது உணர்வுகளைப் புண்படுத்தக் கூடாது. எவரெல்லாம் தங்கள் பெற்றோரை மதித்து மகிழ்விக்கின்றனரோ அவர்கள் மீது இறைவன் தனது கருணையைப் பொழிகின்றார்.

(சனாதனசாரதி, 1998 மார்கழி)

# மிதிவெடிகள் அகற்றும் பணி ஆரம்பம்

பருத்தித்துறை, செப். 6

புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள காணியில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்பட்டுவருகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த கோரிக்கையை அடுத்து கடந்த திங்கட்கிழமை முதல் பருத்தித்துறை இராணுவ முகாமின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், கண்ணி வெடிகளை தேடிப் பிடித்து மீட்டுவருகின்றனர்.

இக்காணியை அண்மையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் விரைவில் மூன்று மாடிக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க-118)

# குடாநாட்டில் கடந்த வருடம் 9, 242 பிறப்புப் பதிவுகள்!

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 9 ஆயிரத்து 242 பிறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இதே ஆண்டில் 3 ஆயிரத்து 23 விவாகப் பதிவுகளும், 2 ஆயிரத்து 688 இறப்புப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 62 பிறப்புப் பதிவுகளும், 3 ஆயிரத்து 648 விவாகப் பதிவுகளும் 2 ஆயிரத்து 757 இறப்புப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான பிறப்புப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. 1999 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 402 பிறப்புப் பதிவுகளும்,2000 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 119 பிறப்புப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை மிகவும் குறைந்த அளவாக 1999 ஆம் ஆண்டில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 46 பிறப்புப் பதிவுகளும், 2000 ஆம் ஆண்டில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 33 பிறப்புப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. (க-10)

## தேசியமட்ட வலைப்பந்தாட்டம்:

# யாழ். மாணவர்கள் 50 பேர் கப்பலில் திருமலை சென்றனர்

யாழ்ப்பாணம், செப். 6

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள மாகாணங்களுக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள யாழ். மாவட்ட அணி நேற்றுமுன்தினம் கப்பல் மூலம் திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றது.

இந்த அணியில் இராமநாதன் கல்லூரி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 50 மாணவிகள் சென்றுள்ளனர்.

இவர்கள் பங்குகொள்ளும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10 ஆம் திகதிகளில் வியாங்கொடையில் இடம்பெறவுள்ளன. (க-10-ரி)

# 'றான்' கிளை அலுவலகங்கள்

தென்மராட்சி, செப். 6

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் (றான்) கிளை அலுவலகங்கள் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் திறக்கப்படவுள்ளன.

தென்மராட்சியில் கைதடியிலும், வடமராட்சியில் நெல்லியடியிலும் கிளை அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் இரத்தினம் ஜெயன்

(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

மலர்வு 1972–10–24

உதிர்வு 1996–09–06

அன்பு மொழி பேசாமல் ஆசை முகம் பாராமல்
ஆண்டு ஐந்து ஓடினவே எம் ஆசைக் குலவிளக்கே!
அனைவரையும் உனதன்பால் கவர்ந்தவனே!
பெற்றவளைப் பிரிந்து பரதவித்த நீ பத்தாம் மாதம்
அன்னையவளைத் தேடி அடைந்தனையோ?
எமை இங்கு தவிக்கவிட்டு — உனக்கு
பார் போற்றும் பல்கலையில் பட்டமளிப்பு விழா
இவ்வாண்டு. நாமெல்லாம் அதைக் காணாது
இயமதேவன் உனை அழைத்திட்டானே!

குடும்பத்தினர்.
கைதடி தெற்கு, கைதடி.

தற்காலிக முகவரி:-
வங்களா ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி,
மல்லாகம்.

(91946)

**உதயன்**

## தவிர்க்க முடியாத தலையிடி!

'தகுதிகாண் அரசின்' ஆரம்பமே தடுமாற்றம் மிக்கதாக இருக்கின்றது.

'தகுதிகாண் அரசின்' ஒரு வருட ஆட்சியின் முடிவில் காபந்து அரசு ஒன்றின் கீழ் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் என்பது, முறிந்து விழ விருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு முண்டுகொடுக்கும் ஜே.வி.பியின் நிலைப்பாடு. அப்போது அந்தத் தேர்தலை அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் தேர்தல் இயந்திரம் நடத்தாது. சுயாதீனமாகச் செயற்பட அதிகாரமுடைய தேர்தல் ஆணையகம் அந்தத் தேர்தலை நடத்தும். அதாவது தேர்தலை முறைகேடாக நடத்தும் - இலங்கையின் வழமையான வரலாற்று நிகழ்வான - குளறுபடிகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புப் பெருமளவு குறையும்.

கடந்த பொதுத் தேர்தலில் தீவுப் பகுதியில் நடந்தது போல - வாக்களிப்பு நிலையங்களுக்குக் கடமைக்குச் சென்ற மாற்றுக் கட்சியின் தேர்தல் முகவர்களை ஆயுதமுனையில் கடத்தித் தடுத்து வைத்துவிட்டு, தமது விருப்பப்படி வாக்குப்பெட்டிகளை அள்ளிப்போட்டு நிரப்பும் நாடகம் போன்று, புதிய திட்டத்தின் கீழ் இலகுவாக வாக்களிப்பு நாடகங்களை நடத்தமுடியாதிருக்கும்.

கண்டியில் 'பாதுகாப்பின்' பெயரால் நடத்தப்பட்டது போன்ற தேர்தல் குளறுபடிகளுக்கும் வாய்ப்பில்லாமல் போகும்.

இந்த எதிர்பார்ப்புகளோடு - அடுத்த ஒரு வருட முடிவில் தேர்தலில் மேலும் அதிக வெற்றிக்கனிகளைப் பறிக்கலாம் என்ற நம்பிக்கையோடு - ஜே.வி.பி., அரசுக்கு முண்டு கொடுக்கத் தயாராக வந்துள்ளது.

ஆனால் ஐக்கியப்பட்ட அணிகளுக்குள் ஆரம்பத்திலேயே குழப்பம்.

இந்த ஆண்டிலோ அல்லது இனி வரும் சில ஆண்டுகளிலோ தேர்தல் ஒன்று நடைபெறமாட்டாது என்று அடித்துக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

ஜே.வி.பி. - பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இரண்டுமே நேர்மாறான அரசியல் கொள்கை உடையவை. ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவே இதனை ஒப்புக் கொண்டிருக்கின்றார். நாட்டு மக்களின் நலன்கருதி தாங்கள் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

ஜே.வி.பி. தனியார் மயப்படுத்தலை முற்றாக எதிர்க்கின்றது; பொ.ஐ.மு. உலக வங்கியின் வழிகாட்டலில் - தனியார் மயப்படுத்தலில் - முன்னிற்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் தேவையற்றது என்கின்றது ஜே.வி.பி.; ஆனால் உள்ளார்ந்த அளவில் ஈடுபாடும் விருப்பமும் இல்லாவிட்டாலும்கூட, அதிகாரப் பரவலாக்கல் மற்றும் புலிகளுடன் சமாதானப் பேச்சு ஆகியவற்றில் நாட்டமுள்ளதுபோல் காட்டுகின்றது பொ.ஐ.மு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அடியோடு நீக்கு என்கிறது ஜே.வி.பி.; வெளியில் அதற்கு ஆதரவு போலக் காட்டிக் கொண்டாலும் அதைப் பற்றிப்பிடித்து நிற்கின்றது பொ.ஐ.மு.

மார்க்ஸிஸ்ட் - இடதுசாரி - கொள்கைகளில் விடாப்பிடியாக நிற்கின்றது ஜே.வி.பி.; இடதுசாரிகள் சிலரையும் அணைத்து வைத்துக் கொண்டு முதலாளித்துவ வழியின் பின் செல்கிறது பொ.ஐ.மு.

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் சிறிய கட்சிகளுக்கும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் தேர்தல் முறையை விரும்புகிறது ஜே.வி.பி.; ஆனால் இதனைமாற்றி பழைய தொகுதிவாரியான தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது பொ.ஐ.முன்னணி.

இப்படிக் கொள்கை வேறுபாடு, கோட்பாட்டு முரண்பாடு கொண்ட இரண்டு அணிகள் நாடாளுமன்ற ஆட்சி நீடிப்புக்காக இணைந்து செயற்பட முன்வந்திருக்கின்றன.

இவ்வாறு வேறுபட்ட இரு அணிகள் ஒன்றுபட்டுச் செயற்படும்போது பொதுத் தேர்தல் விவகாரத்தில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு பொதுப் பிரச்சினையிலும் புதிய புதிய தலையிடிகள் வந்து கொண்டுதான் இருக்கும். அது தவிர்க்க முடியாததே!

# வீதி விபத்தில் காயமடைந்த வண.பிதா உயிரிழப்பு

திருகோணமலை,செப்.6

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - பவுஸர் விபத்தில் சிக்கிக் காயமடைந்த வண.பிதா ஒருவர் நேற்றுமுனதினம் மரணமானார்.

வண.பிதா கிளகோரி டொனேசன என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை செல்லும் வழியில் காலை 11.30 மணியளவில் பாலம்போட்டாறு பத்தினிபுரத்திற்கு இடையே இவர் விபத்திற்கு உள்ளானார். மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இவர் தண்ணீர் பவுசர் ஒன்றுடன் மோதுண்டார். தலையில் கடுமையான காயங்களுக்கு உள்ளான இவர் உடனடியாக திருகோணமலை மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இவர் மரணமானார்.

திருகோணமலை பேராயப் பங்கைச் சேர்ந்த இவர் சம்பவதினம் மட்டக்களப்பில் இருந்து வேகமாக வந்து கொண்டிருந்தார். பாலம்போட்டாறு பகுதியில் வீதி புனரமைப்புப் பணியில சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தண்ணீர் பவுஸர் ஒன்றுடன் இவர் மோதுண்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உள்ள இவரது உடலத்தை திருகோணமலைக்கு எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை மட்டு - திருகோணமலை ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மேற்கொண்டுள்ளார். (ஐ-145)

# நாட்டு நடப்பு

வயலின் பயிர் தேடும் நீரை
வண்டுகள் தேடும் தேனை
மயிலினம் தேடும் மேகம்
மானினம் தேடும் புல்லை
கயல்விழி காதலனைத் தேடும்
காளையோ கன்னியைத் தேடும்
பயத்தினால் அழிவைத் தேடும்
பாவியாய்த் தமிழன் போனான்.
\- *விகடகவி.*

## பஸ்தரிப்பு கம்பங்கள்

கோப்பாய்,செப்.6

கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பஸ், மினிபஸ் நிறுத்தப்படுமிடங்களுக்கான அடையாளக் கம்பங்கள் வலி. கிழக்குப் பிரதேச சபையினால் நடப்பட்டுள்ளன. (க-72)

# ஸ்ரீலங்கா அரசு-ஜே.வி.பி. உறவு இந்தியத் தரப்புக்குக் கவலை

கொழும்பு,செப்.6

தகுதிகாண் அரசு ஒன்றை அமைக்க ஜே.வி.பியின் ஆதரவை இலங்கை அரசு பெற்றிருப்பது குறித்து இந்திய அரசு உத்தியோக பூர்வமற்ற முறையில் கவலையை வெளியிட்டிருப்பதாக பிரபல பத்திரிகையாளர் சிங்ஹ ரட்ணதுங்க தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பியின கிளர்ச்சிக் காலத்தில் பொதுமக்களுக்காக நடத்தி வந்த கொள்கை விளக்க வகுப்புக்களில் இந்தியாவின ஆக்கிரமிப்புக்கு எதிராக தனது அங்கத்தவர்களுக்கு ஜே.வி.பி. போதனை செய்துவந்தது.

1987, 89 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியினால் கிளர்ச்சி மேற்கொண்ட வேளையில் இந்தியப் பொருள் இறக்குமதிக்கு எதிராக அந்த அமைப்பு தீவிர பிரசாரம் மேற்கொண்டிருந்தது.

இந்திய நிறுவனம் ஒன்றிடமிருந்து இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மருந்தினைக் கொள்வனவு செய்ததை அடுத்து அந்த இந்திய நிறுவனத்தின் பணிப்பாளரான பெண் ஒருவர் ஜே.வி.பி. அமைப்பால் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய பின்னணியில் இன்று இலங்கை அரசு ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சியைத் தக்க வைத்திருப்பது புதுடில்லி வட்டாரங்களுக்கு கவலையை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ-3)

## வங்கி வைப்புக்கள் மூலம்

# ஆயுள் காப்புறுதி செலுத்துவோருக்கு 5 வீத விசேட கழிவு கிடைக்கும்

வங்கிகளில் உள்ள தமது வைப்புக்கள் மூலமாக ஆயுள்காப்புறுதி செலுத்துபவர்களுக்கு இம்மாதம் முதல் 5 சதவீத விசேட கழிவு வழங்கப்பட இருப்பதாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமது வைப்புக்கள் மூலம் மாதாந்தக் கட்டணமாகச் செலுத்துபவர்களுக்கும், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை செலுத்துபவர்களுக்குமே இந்தச் சலுகைக் கழிவு - வழங்கப்படவுள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகம் இந்தக் கழிவுத் தொகை தொடர்பான அறிவிப்பை அண்மையில் விடுத்துள்ளது என்றும் -

இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிய விரும்புபவர்கள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-4)



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அண்மையில் வழங்கினார். செல்வி கோமகள் சிவானந்தம் என்பவர் நியமனக் கடிதத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதேச சபைச் செயலாளர் அ.அ.நடராசாவும் காணப்படுகிறார்.
*(படம்:- வடமராட்சிச் செய்தியாளர்)*

# 12 நாள் பிள்ளையுடன் நள்ளிரவில் கிணற்றில் பாய்ந்தார் தாய்!

## பாலகி அநியாயமாக உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம்,செப்.6

12 நாள் குழந்தையுடன் நள்ளிரவு 12 மணிக்கு கிணற்றில் குதித்த தாய் உயிர்தப்பினார்; குழந்தை உயிரிழந்தது.

ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாக்கியநாதன் ரவிகா என்ற பெண் குழந்தையே அநியாயமாக உயிரிழந்தது.

பாக்கியநாதன் சற்குணநாயகி (வயது35) என்பவரே குழந்தையின் தாய்.

இவர் நள்ளிரவு 12 மணிக்கு கிணற்றில் குதித்ததாகத் தெரிவித்து அதிகாலை 2.50 மணிக்கு இருவரும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர். குழந்தை உயிரிழந்திருந்ததால் மரண விசாரணையின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட தாய் மனநோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்ததை அடுத்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மரண விசாரணையை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதியின் பணிப்பின் பேரில் குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்திய பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-15)

## விடுதலையானவர் சிறைவாசலில் மீண்டும் கைது!

கொழும்பு,செப்.6

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு நேற்றுமுன் தினம் விடுதலையாகி வெளியே வந்த ஒருவர் சிறைச்சாலை வாசலில் வைத்து மீண்டும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஆறு மாத கால சிறைத்தண்டனை பெற்ற இவர் நேற்று முன்தினம் விடுதலை பெற்றுச் சிறையில் இருந்து வெளியில் வந்த வேளையில் சிறைச்சாலைக்கு முன்பாக காத்திருந்த நீர்கொழும்பு பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது இவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். (க-9)

# வட்டு.பெருமகன் கண்தானம்; இருவர் பார்வை பெறும் வாய்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

ஒருவர் செய்த கண்தானத்தால் இருவர் பார்வை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தானம் செய்யப்பட்ட இரு கண்களும் இருவருக்குப் பொருத்தப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த இருதினங்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த துரைராசா ரஞ்சிதமலர் (வயது 43) என்பவரும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைச் சேர்ந்த நாகராசா பத்மநாதன் (வயது 72) ஆகிய இருவருக்குமே கண்கள் பொருத்தப்பட்டன.

இருவரும் கண்ணில் ஏற்பட்ட 'அல்சர்' நோயினால் கண்பார்வையை இழந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது 72) என்பவரே கண்தானம் செய்தவர் ஆவார்.

வயோதிபம் காரணமாக நோய்வாய்ப்பட்ட இவர் கடந்த மாதம் 16 ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 15 தினங்களுக்குப் பின் கடந்த முதலாம் திகதி உயிரிழந்தார். மனைவி, மகனின் பூரண சம்மதத்துடன் கண்கள் தானம் செய்யப்பட்டன. (க-15)

**நாளை**

ஆவணி 22
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தி
முற்பகல் 9.02 வரை.
நட்சத்திரம் : அச்சுவினி
மாலை 6.32 வரை.
சுபநேரம்: 6.04 - 7.34
ராகுகாலம் : 10.34 - 12.04
(பழைய நேரப்படி.)

**உதயவாக்கு**

... அன்பை வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது. அன்புக்கு விலை அன்புதான்.

**கண்ணிவெடிகள் காத்திருக்கின்றன, கவனம்!**



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 03 - 10 - 1978

மறைவு 07 - 08 - 2001

## செல்வி துஷ்யந்தி சுப்பிரமணியம்

திதி:-06-09-2001

நாள்கள் பல சென்றாலும் ஆறாது எம்துயரம்
எம்மைவிட்டு எங்கு சென்றாய் எம் அன்பு அக்கா (ஜெனோ) வே
அழியாது உம் நினைவு எம்மைவிட்டு.

நி.முகவரி: *வேளாபள்ளம், மிருசுவில்.*
த.முகவரி: *அராலிவடக்கு, செட்டியார்மடம்.*

பிரிவால் துயரும்:
அப்பா - அம்மா,
தங்கை (லெபனான்),
தம்பிமார்.

(91935)

# நினைவலைகள்



அன்னை மடியில் 27 - 03 - 1925

அம்பிகை அடியில் 06 - 08 - 2001

## அமரர் சி.வைரவிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர் - சரசாலை)

கற்றவர்கள் மத்தியிலே முன்னே நிற்பீர்
கடவுளது கோயிலிலும் முன்னே நிற்பீர்
உற்றவர்க்கும் மற்றவர்க்கும் உதவி செய்வீர்
ஊறுபல செய்தவர்க்கும் உதவி செய்வீர்
பெற்றவர்கள் மனத்தினிலே நிலையாய் உள்ளீர்
பெருமளவில் மாணவரின் மனத்தில் உள்ளீர்
நற்றவம்தான் அம்பிகைமுன் தங்கள் மறைவு
நாளுமுனை மறவாது எங்கள் நெஞ்சு.

இன்று (06.09.2001) வியாழக்கிழமை இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
*தில்லைகட்டி வீதி,*
(புகையிரத நிலையமருகில்)
*மயிலணி,*
*சுன்னாகம்.*

நிரந்தர முகவரி:
*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.*

(91937)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 07 - 02 - 1943

மறைவு 07 - 08 - 2001

## திருமதி கந்தசாமி சக்திமகானந்ததேவி

(மம்மி)

திதி: 06.09.2001

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும் மற்றும் பிறவழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (06.09.2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.

நிரந்தர முகவரி:
*இடந்தரை ஒழுங்கை,*
*காங்கேசன்துறை.*

தற்காலிக முகவரி:
*உடுவில் தெற்கு,*
*சுன்னாகம்.*

(91872)

## அந்த பஸ்ஸை கண்டுபிடிக்க உதவி கோருகிறது பொலீஸ்!

கொழும்பு, செப்.6

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் பயன்படுத்திய சொகுசு பஸ்ஸைக் கண்டு பிடிப்பதற்கு உதவுமாறு பொலீஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

கடந்த ஜுலை மாதம் 23 ஆம் திகதி அந்த பஸ் குருநாகலில் உள்ள விளையாட்டரங்கு ஒன்றில் காணப்பட்டது என அந்தப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் இந்தப் பஸ்ஸை கண்டுபிடிக்கும்விதத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் -

இதன் மூலமே கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லமுடியும் எனவும்- பொலீஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ம-4)

## கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த வழிகாட்டல் வகுப்புகளுக்கு 2001/2002 கல்வியாண்டில் பதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்கும் இராமநாதன் நுண்கலைக் கழக அனைத்து வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் அடுத்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (க-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.6

ஆங்கிலத் தேசிய டிப்ளோமா (என்.டி.ஈ) மாலை நேர மற்றும் முழுநேரப் பயிற்சி நெறியை தொழில்நுட்பக்கல்லூரியில் பயின்றவர்களையும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயின்றவர்களையும் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன மண்டபத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-3)

## விபத்தில் மாணவர் கால்முறிந்து படுகாயம்

கோப்பாய்,செப்.6

கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகே நடந்த விபத்து ஒன்றில் மாணவர் ஒருவர் கால்முறிந்து படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் உயர்தரப் பரீட்சை எழுதச் சென்றவேளை வேகம் கட்டு மீறியதால் இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

கொடிகாமம் தவசிக்குளத்தைச் சேர்ந்த செல்வரெட்ணம் நந்தகோபால் (வயது 19) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (க-72)

## வழிப்போக்கருக்கு வாள்வெட்டு!

யாழ்ப்பாணம்,செப்.6

இரவு வேளையில் இருவருக்கிடையில் தகராறு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை, வழிப்போக்கர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்ததாகத் தெரிவித்து நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை, கலிகைச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை ஆனந்தராசா (வயது 48) என்பவரே தலையில் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

இரவு ஆள் மாறாட்டமாகவே இச சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்தரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளார். (க-15)



உ
குகமயம்
காரைநகர் மணற்பிட்டி - புகலி
## சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
புனராவர்த்தன பிரதிஷ்டா
# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
06.09.2001

குகநேயச் செல்வர்களே!

நிகழும் விஷு வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாளாகிய,

03.09.2001 திங்கட்கிழமை:- கும்பாபிஷேக பூர்வாங்கக்கிரியைகள் ஆரம்பமாகி உள்ளன.

05.09.2001 புதன்கிழமை:- காலை 9.00 மணிக்கு தூபிஸ்தாபனம், விம்பஸ்தாபனம், எண்ணெய்க்காப்பு, விஷேட பூஜைகள்.

06.09.2001 வியாழக்கிழமை:- காலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை உள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம். தொடர்ந்து 8.00 மணிமுதல் 9.15 மணி வரையுள்ள சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அதனைத் தொடர்ந்து சண்முக அர்ச்சனை நடைபெறும்.

மாலை திருக்கல்யாணம் நடைபெற்று சுவாமி மங்கள வாத்தியங்கள் சகிதம் மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் வீதியுலாவரும் காட்சியும் தொடர்ந்து விஷேட கலை நிகழ்வுகளும் இடம்பெறும். அத்தருணம் அடியார்கள் யாவரும் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

(91921) - திருப்பணிச் சபையினர்.

# பாராட்டி நன்றிகூறி வாழ்த்துகின்றோம்

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்
புனர்நிர்மாண வேலைகளை முடிக்கும் நல்நோக்கோடு
கட்டம் கட்டமாக நிதி உதவி வழங்கிய,

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு



## கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ



## கே.வி.குகேந்திரன்

(ஜெகன்)

அவர்களுக்கும்

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.



## க.மணிபல்லவராஜன்

(நிசாந்தன்)

அவர்களுக்கும்

எமது செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனமும் ஊர்மக்களும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*16/2,சீனியர் ஒழுங்கை,*
*கலட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்.

(91942)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலராக 24 - 09 - 1989

சருகாக 30 - 08 - 1999

## செல்வி கிருஷாளினி தர்மகுலசிங்கம்

*(நெல்லியடி அ.மி.த.க. பாடசாலை - 5ஆம் ஆண்டு மாணவி)*

பாடித்திரிந்த குயில்
பாதியிலே பறந்தாலும்
மீதிப் பொழுதுகளும்
உந்தன் நினைவுகளில் தான் கரையும்.
கொஞ்சு மொழிச் சிரிப்பும்
கோல மயில் அழகும்
இதயத்தில் நிரப்பி என்றும்
இனிமையையே பரப்பி நிற்கும்.

*அல்வாய்.*

உன் பிரிவைத் தாங்காது தவிக்கும்:
அப்பா, அம்மா, அண்ணாமார்,
உறவினர்கள், நண்பர்கள், நண்பிகள்.

(91949)

# ஐ.நா. மாநாட்டுக்காக நியூயோர்க் செல்லும் வழியில் 'எவ்-16' போர் விமானங்களைப் பெற முஷாரப்புடன் சந்திரிகா பேசுவார்

கொழும்பு,செப்.6

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த மாத இறுதியில் நியூயோர்க்கில் வைத்து பாகிஸ்தான இராணுவ ஆட்சியாளரும் ஜனாதிபதியுமான பர்வேஷ் முஷாரப்பைச் சந்திக்கும்போது இராணுவ விமானங்கள், ஹெலிகள், இராணுவத் தளபாடங்கள மற்றும் ஆயுதங்களைத் தமது நாட்டுக்கு வழங்கி உதவுமாறு கோரிக்கை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாமாபாத்தை மையமாகக் கொண்ட 'இந்தோ - ஏசியன் நியூஸ் சேவிஸ்' என்ற செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக இரு தலைவர்களும் செல்லும்போது தனித்துச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

அவசர இராணுவ உதவிகளை வழங்குமாறு சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தான் ஜனாதிபதியான முஷாரப்பிடம் அப்போது கேட்பார் என்று அந்தப் பத்திரிகையின் முன்பக்கச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எவ் -16 ரக குண்டுவீச்சு விமானங்களில் ஆகக் குறைந்தது மூன்றையாவது பாகிஸ்தானிடமிருந்து வாடகைக்கு அல்லது விலைக்குப் பெற விரும்புகிறார்.

ஆனால் அப்படிப் பெறுவது சட்ட மற்றும் வேறு சிக்கல்கள் இருப்பதால், அவர் மாற்றுவழியாக சீன - பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்பான குண்டுவீச்சு விமானங்களைப் பெற முனைவார் எனத் தெரியவருகின்றது.

பாகிஸ்தானிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தால் விமானங்களை வாடகைக்கு அல்லது விலைக்குப் பெறுவதற்கான நடவடிக்கைகளின் முன்முயற்சிகள் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

அமெரிக்கத் தயாரிப்பான எவ் -16 ரக குண்டுவீச்சு விமானங்களை பாகிஸ்தானிடமிருந்து இலங்கை பெறுவதில் இரு சிக்கல்கள் உள்ளன.

அமெரிக்க - பாகிஸ்தான் ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த விமானங்களை அமெரிக்காவின் அனுமதியின்றி பாகிஸ்தான் வேறு ஒரு நாட்டுக்கு வாடகைக்கோ அல்லது விலைக்கோ வழங்க முடியாது.

அடுத்தது, பாகிஸ்தான் தற்சமயம் எதிர்நோக்கியுள்ள இராணுவ நெருக்கடி காரணமாக, தனது பாதுகாப்பை ஒதுக்கிவிட்டு அத்தகைய விமானங்களை விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை.

ஹெலிகளையும், சீனத் தயாரிப்பு குண்டுவீச்சு விமானங்களையும் இராணுவ ஆயுதங்களையும் ஸ்ரீலங்கா பெறுவதற்கு முயலக்கூடும் என பெயர் குறிப்பிடாத வட்டாரங்களை ஆதாரம் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேபோன்ற கோரிக்கையோடு முன்னர் ஸ்ரீலங்கா இந்தியாவை நாடியிருந்தது. ஆனால் இந்தியா அந்தக கோரிக்கையை மறுத்துவிட்டது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்துக்குச் செல்லும்போது இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பும் எதிர்வரும் 25 ஆம் திகதி சந்திக்கவிருக்கின்றனர்.

அதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா - முஷாரப் சந்திப்பு இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஐ.நாவில் இடம்பெறும் சிறுவர்கள் தொடர்பான மாநாட்டில் காலை ஜனாதிபதி சந்திரிகாவும் மாலை முஷாரப்பும் பேசவிருக்கின்றனர், (க-3)

## சிறுவர் பாடசாலை இன்று திறப்பு

வலிகாமம் தெற்கு,செப்.6

சுன்னாகம் - கந்தரோடை வீதியில் பழநி முருகன் ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள புதிய கட்டடத்தில் ஜெயந்தினி இலவச சிறுவர் பாடசாலை இன்று வியாழக்கிழமை காலை பத்து மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இத்திறப்புவிழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்.

வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் (பாபு) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

அமரர் செல்வி சி.ஜெயந்தினியின் ஆறாவது ஆண்டு நிறைவையும் 18 ஆவது ஆண்டு பிறந்ததினத்தையும் நினைவு கூர்ந்து அவரது பெற்றோர்களால் இச்சிறுவர் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. (ஜ-152)

## தகுதிகாண் அரசு டிசெம்பர் வரையே தாக்குப் பிடிக்கும் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,செப்.6

ஜே.வி.பியின் ஆதரவுடன் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அமைக்கும் தகுதிகாண் அரசு டிசெம்பர் மாதத்துக்கு அப்பால் நீடிக்கும் வாய்ப்பு இல்லை.

ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டம் நாட்டு மக்களுக்குப் பாரிய சுமையினை ஏற்படுத்தப் போகின்றது என்றும் -

அந்த வரவு - செலவுத் திட்டத்தை ஜே.வி.பி. ஆதரிக்க முடியாத நிலை ஏற்படும் போது அரசுக்கும் - அந்த அமைப்புக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்படும் என்றும் -

அவர் மேலும் சொன்னார்.

வரவு - செலவுத் திட்டத்தை அரசு தயாரிக்கும் போது தமது ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. விதித்த நிபந்தனையை அரசு ஏற்றுள்ளதால் -

மக்கள் மீது சுமைகளைக் கொண்டுவரும் வரவு - செலவுத் திட்டத்தை அரசு தயாரிக்க முடியாது இருக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வரவு - செலவுத் திட்டத்தில் புதிய வரிகளை அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-3-9)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டினால் முப்பது லட்சம் ரூபா செலவில் மீள்புனரமைப்புச் செய்யப்பட்ட மானிப்பாய் கலாசார மண்டபத் திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுமயிலும் குகேந்திரனுக்கு (ஜெகன்) மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் மாலை போட்டு வரவேற்பதைப் படத்தில் காணலாம். (ஜ-185)

## நாட்டில் உள்ள 24 சிறைகளில் 76 ஆயிரம் பேர் தடுத்துவைப்பு

கொழும்பு,செப்.6

நாட்டில் உள்ள 24 சிறைச்சாலைகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் 76 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் ஆயிரத்து 300 தமிழர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கைதிகளைப் பராமரிக்க சிறைச்சாலைத் திணைக்களத்தில் 4 ஆயிரத்து 200 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## யுத்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 1,612 பேர் ஊனமுற்றனர்

வவுனியா,செப்.6

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தம் காரணமாக ஆயிரத்து 612 பேர் ஊனமுற்றுள்ளனர் என கிளிநொச்சி பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 11 ஆண்களும் 601 பெண்களும் ஊனமடைந்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளின் போது புதைத்துவைக்கப்பட்டிருந்த ஷெல்கள் மற்றும் மிதிவெடிகள் காரணமாகவும் -

படையினரால் ஏவப்பட்ட ஷெல்கள் மற்றும் விமானத் தாக்குதல்கள் காரணமாகவும் - இவர்கள் ஊனமடைந்துள்ளனர் என்றும் பிரஜைகள் குழு மேலும் தெரிவித்துள்ளது.(ஐ-3)

## கட்டுநாயக்கா தாக்குதல் விசாரணை இறுதி அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு,செப்.6

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக விமானப்படையினர் நடத்திய விசாரணைகள் தொடர்பான இறுதி அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏயர்வைஸ் மார்ஷல் விஜித தென்னக்கோன் தலைமையிலான ஆறு உறுப்பினர்கள் கொண்ட குழுவே இந்த விசாரணைகளை மேற்கொண்டது.

தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் இருந்த பாதுகாப்பு தலைமை மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளில் காணப்பட்ட சீர்கேடுகள் என்பன தொடர்பாக விரிவான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

இறுதி அறிக்கையில் தங்களது பரிந்துரைகளும் இடம்பெற்றுள்ளன என்று விசாரணைக்குழு அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

விமானப்படைத் தளபதியின் கருத்துக்களும் அறிக்கையில் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## சிறுவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.6

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய் பகுதியில் நடத்தும் சிவசக்தி முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சிவசக்தி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்வார். (ஐ-3)

## 8ஆவது உலகச் சைவ மாநாடு மொறீசியஸில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.6

எட்டாவது உலகச் சைவ மாநாடு மொறீசியஸின் தலைநகர் போட்லூயிஸில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றது.

உலக சைவப் பேரவையின் மொறீசியஸ் கிளை, தமிழ் கோயில்களின் சம்மேளனம் மற்றும் ஆறு நிறுவனங்கள் இணைந்த தேசிய ஒருங்கமைப்புக் குழுவால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாநாடு இன்று போட்லூயிஸ் அருள்மிகு சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயிலில் பிற்பகல் 3.30 மணிக்கு சமய வைபவத்துடன் ஆரம்பமாகி, கைத்தொழில், வர்த்தக சர்வதேச வர்த்தக அமைச்சர் தலைமையின் கீழ் மோகாவில் பிற்பகல் 6.00 மணிக்கு மகாத்மாகாந்தி நிறுவனத்தின் கேட்டோர் கூடத்தில் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படும். மொறீசியஸ் குடியரசின் உபதலைவர் மாண்புமிகு ஏ.வி.செட்டியார் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

மாநாட்டின் கருப்பொருள் 'சைவ சமயம் தொலைநோக்கு, திட்டம், செயற்பாடு' என்பதாகும்.

இந்த மாநாட்டில் வாசிக்கவென கே.சோமசுந்தரம், வி.கே.சிவப்பிரகாசம் ஆகியோரின் ஆய்வு அறிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன.

நூறுக்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்வர். இலங்கைக் கிளைத் தலைவர் கே.தயாபரனின் தலைமையில் 23 பேராளர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.


தென்ஆபிரிக்காவில் இருந்து 24 பேரும் தமிழ்நாட்டில் இருந்து 15 பேரும் லண்டனில் இருந்து ஐவரும் ரியூனியஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து தலா மூவரும் ஆஸ்திரேலியா, போலந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து தலா இருவரும் பேராளர்களாக மாநாட்டில் பங்குபற்றுவர். (ஐ-3)

## பண்டாரநாயக்கா குடும்பத்தை பாதுகாக்க முயல்கிறேனா?

### குற்றச்சாட்டை மறுக்கின்றார் சபாநாயகர்

கொழும்பு,செப்.6

பண்டாரநாயக்கா குடும்பத்தைப் பாதுகாக்க முயல்வதாகத் தம்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அடியோடு மறுப்பதாக சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.



சபாநாயகர் தனது செயற்பாட்டில் இருந்து தவறும் பட்சத்தில் அவர் மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவோம் என்று ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்கா தெரிவித்திருந்தார்.

சபாநாயகர் மீது அவர் சுமத்தியுள்ள பல குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கையிலேயே சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நாடாளுமன்றத்தின் ஏகோபித்த சம்மதத்துடனேயே சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டேன் நாடாளுமன்றத்தின் ஒருமைப்பாடு, உறுப்பினர்களின் ஐக்கியம் ஆகியவற்றுக்காகச் செயற்பட்டு வருகின்றேன்; வேறுபாடுகள் காட்டாமல் சகல உறுப்பினர்களையும் ஒன்றாகவே மதிக்கிறேன்.

"பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு ஆதரவாகச் செயற்படுவதாக என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. எவருக்குமாக நான் செயற்படவில்லை.

"சபாநாயகர் பதவிக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ள ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்கா மீதும் அவரது செய்தியை வெளியிட்ட பத்திரிகை மீதும் நாடாளுமன்ற அதிகாரங்களின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்"

- இப்படி சபாநாயகர் தெரிவித்தார். (ஐ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கிலம் விசேடமாக

O/L புதிய, பழைய பாடத்திட்டம் Distinction, Credit பெறுபேறுடைய Paper Class வரை. A/L, G.A.Q, ஆண்டு 8-10 வரை கற்பிக்கப்படும். ஆசிரியர், இல.85, சிவன்கோயிலடி, சிவன்கோயில பின்புறம், திருநெல்வேலி. (91924)

## தவறிவிட்டது

அ.அன்னபூரணம் என்பவருடைய தே.அ.அ. (இல.278661105V) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 17, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91928)

சண்முகானந்தன் கமலாம்பிகை (அளவெட்டி) என்பவருடைய தே.அ.அ. (இல.395240811V), வி.அ.அ. (இல. 0907007068) என்பன ஸ்ரான்லி றோட்டுக்கும் சட்டநாதர் சிவன்கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 910, பருத்தித்துறை வீதி, சட்டநாதர்கோயிலடி நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(91931)

## ஆங்கிலக் கல்வி

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்து கற்பிக்கலாம். தொடர்பு: இ.தேவதாஸ், இல.231, கோயில் வீதி, நல்லூர். (91940)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976இல் பிறந்த, பட்டதாரி ஆசிரியருக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, படித்த அழகிய மணமகளைத் தாயார் எதிர்பார்க்கின்றார். தொடர்பு: விள.இல.1359, மே/பா உதயன். (91905)

## இசை வகுப்புகள்

கோண்டாவில் நியூ ரிதம்ஸ் இசைமன்றில் **A/L** (2001) பரீட்சை முடித்தவர்களுக்காக ஓர்கன், கிற்றார் வகுப்புகள் (புதியபிரிவு) சனி, ஞாயிறு 4.00 **P.m** (08-09-2001 முதல்) நடைபெறவுள்ளது. அத்துடன் சிறுவர்களும உத்தியோகத்தர்களும் இணையலாம். **R.**கீதன், இல.691, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (91951)

## திருமண சேவை

1970ஆம் ஆண்டு பூராட நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமுள்ள வங்கியில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணப்பெண் தேவை. ஜாதகம, படத்துடன் தொடர்பு கொள்ளவும். தூர்க்கா திருமண சேவை,178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (91956)

## விற்பனைக்கு

2 நீளக்கோண் **(GRAMPIAN)** 2யூனிற் **35W (UNI-PEX),** பூ மொடல், 1அம்பிளிபயர் 60**W (AHUJA),** 75 இரும்புக் கதிரைகள் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **J.** சிவகுமார், வைத்தீஸ்வரா சனசமூக நிலையம் அருகில்), உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (91955)

## இடமாற்ற விண்ணப்பப் படிவம்

ஆசிரிய இடமாற்ற விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C/18135)**

## தளபாடங்கள் அன்பளிப்பு

தும்பளை தெற்கு சிக்கனக்கடன் உதவு கூட்டுறவுச் சங்க நூலகத்திற்கு வேண்டிய தளபாடங்கள் போருட நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இக்கட்டடம் அமைப்பதற்கான நிதியுதவியையும் கடந்த ஆண்டு போருட நிறுவனமே வழங்கி இருந்தது.

இதேவேளை -

தும்பளை தெற்கு மக்கள் இதுவரை காலமும் பாவித்து சேதமடைந்திருந்த பொதுக் கிணறு மீண்டும் போருட் நிறுவனத்தினால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (க-15)

**ENGLISH**
SPOKEN & GRAMMAR
*By:- BRITTO*

புதிய பிரிவு ஆரம்பம்.
நேரம்: **9.30**(ப.நேரம்)
(சனி காலை)
நாள்: **8-9-2001- சனி**
இடம்: **கொக்குவில்**
(ஞான பண்டிதாவுக்கு அருகில்)
(C/18119)

---

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## திரு.கி.கணேசன் (அதிபர்)

வட அல்வை ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் அதிபர் **திரு.கி. கணேசன்** அவர்கள் அதிபர் தரம் 2இல் இருந்து அதிபர் தரம் Iஇற்கு பதவிஉயர்வு பெற்றமைக்கும், தனது சேவையை திறமையாகவும், விழிப்புடனும் அனைவராலும் பாராட்டத்தக்க வகையிலும் ஆற்றி, ஓய்வுபெறும் இச்சந்தர்ப்பத்தில் அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**நக்கீரன் ச.ச.நிலையம்,**
**நக்கீரன் மாதர் சங்கம்,**
**நக்கீரன் சி.க.கூ.சங்கம்,**
**வட அல்வை குச்சம் ஞானவைரவர்**
**ஆலய பரிபாலன சபையினர்.**

அல்வாய் வடக்கு,
அல்வாய் (91947)

---

# கண் பரிசோதனை முகாம்

**அமரர் க.சிறீபாஸ்கரன்** அவர்களின் ஞாபகார்த்தமாக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் கண் பரிசோதனை முகாம் எரிக்கணேஷ் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் இலங்கை 7ஆம் நாள் அட்லெண்டிஸ் திருச்சபையின் ஆதரவுடன் நடத்தப்படும்.

*காலம்:-* **09.09.2001 ஞாயிற்றுக்கிழமை**
*நேரம்:-* காலை 9 மணி
*இடம்:-* **செல்வா சனசமூக நிலையம்,** தொல்புரம்.

* திருச்சபையில் கண்ணாடி வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*850, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**நிர்வாகம்**
**7ஆம் நாள் திருச்சபை.**

விளம்பர அன்பளிப்பு:- **வேளாங்கண்ணி ஸ்ரோர்ஸ்**
**(லாவனியா)**
**783, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
(91959)

---



# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடலியடைப்பு புதரானை ஸ்ரீ சித்திவிநாயகர் **ஆலய மஹோற்சவ** காலத்தின் போது, ஆலயத்துக்கு மின் வழங்க இலங்கை மின்சார சபையினரிடமிருந்து ஜெனரேட்டரை பெற்றுத் தந்தமைக்கும் அதற்குரிய எரிபொருளைத் தமது கட்சியால் வழங்கியமைக்கும் அத்துடன் வடலியடைப்பு கிராமம் முழுவதற்கும் மின் சாரம் வழங்குவதற்காக முதற்கட்டமாக ரூபா பத்துலட்சம் நிதி உதவி வழங்கியமைக்காகவும்



மாண்புமிகு அமைச்சர்
## கே.என்.டக்ளஸ் தேவானந்தா
அவர்களையும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளரும்
நாடாளுமன்ற உறுப்பினருமான உயர்திரு.
## கா.வே.குகேந்திரன் (ஜெகன்)
அவர்களையும்



வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும்
வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி.
அமைப்பாளரும் இந்து சமய விவகாரப்
பொறுப்பாளருமாகிய
## திரு.ந.திரிலோகநாதன்
அவர்களையும்

**நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

நாளை (07-09-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் வடலியடைப்பு கிராமத்துக்கு மின்வழங்கும் வைபவம் **திரு.ந.திரிலோகநாதன்** அவர்களால் சம்பிரதாய பூர்வமாக புதரானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நன்றியுடைய
**வடலியடைப்பு மக்கள்**

(C/18136)

---

## தொலைத்தொடர்பு நிலைய (மோட்டறோலா) உரிமையாளர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

காலம் : **08-09-2001** சனிக்கிழமை மு.ப. 10 மணி
இடம் : **கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்**

எமது சங்க உறுப்பினர்களையும் மற்றும் அனைத்து மோட்ட றோலா உரிமையாளர்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

"ஸ்ரீசாலினி"
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

த. தேவராஜா,
தலைவர்.

(91952)

---

## மக்கள் நலன்காக்கும் பிரிவு
### இருபாலைச்சந்தி, கோப்பாய்

கீழ்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ☆ **தமிழத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி**
- ☆ **ஆங்கிலத் தட்டச்சுப் பயிற்சி**
- ☆ **தையல் பயிற்சி**
- ☆ **பூவேலை, ஐசிங், தலையலங்காரப் பயிற்சி, கைப்பணிப் பொருள்கள், துணியில் வர்ணம் தீட்டுதல்**
- ☆ **ஆங்கில வகுப்பு**

விண்ணப்பங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
*விண்ணப்ப முடிவு திகதி:* **20.09.2001**

☆**பாலர் பாடசாலைக்கு மாணவர்கள் எதுவித கட்டணமும் இன்றி சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.**

(91953) - **நிர்வாகம்.**

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீதாலக்சுமி அம்மாள் பாலசுப்ரமணியக்குருக்கள்

காலஞ்சென்ற செல்லத்துரைக் குருக்கள் பாலசுப்ரமணியக் குருக்களின் மனைவி சீதாலக்சுமி அம்மாள் நேற்று (05.09.2001) புதன்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார். அன்னார் கிரிராஜ கன்னிகாம்பிகை (மொறிசியஸ்), நகுலேஸ்வரசர்மா(யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆலய அர்ச்சகர்), வல்லவாம்பிகை ஆகியோரின் தாயாரும், பாலசுப்ரமணியக் குருக்கள்(மொறிசியஸ்), காயத்திரிதேவி(மட்டுவில்), தாமோதரஐயர் (காளியம்மன் கோயில், கன்னாதிட்டி) ஆகியோரின் மாமியாரும், புவனேஸ்வரி, சுபாங்கி, சிவபாலினி, பாலசிவசர்மா, ஸ்ரீ வித்யா தர்ஷினி, காமகோடிகா, மாரீஸ்வரன் சுபகரி, மகோதரன், ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 05.09.2001 புதன்கிழமை மாலை கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*74,பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (91960)

தகவல்:-
பா.நகுலேஸ்வரசர்மா
(மகன்)

## திருமதி மகேஸ்வரி செல்லையா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் பாதிரியார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்லையா நேற்று (05.09.2001) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும், செல்வரஞ்சினி, செல்வலிங்கம் (கனடா), ஞானரஞ்சி (நோர்வே), குணரஞ்சி (நோர்வே), மனோரஞ்சி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*இல.10,17ஆம் லேன்,*
*கல்லூரி வீதி,*
*கொட்டஹேனா.* (C-18134)

தகவல்:
மகேந்திரன்
**இளவாலை.**

## திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம்

(இளைப்பாறிய கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்/ கிராம சேவையாளர்)

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம் நேற்று (05.09.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அரியகுட்டி இராசரத்தினம் (இளைப்பாறிய எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் பிரிய பத்தினியும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியகுட்டி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆனந்தகுமார் (சுவிஸ்), திருமதி ஆனந்தகௌரி முத்துக்குமாரசாமி **B.A (Hons)** (முன்னாள் பட்டதாரிப் பயிலுநர் வலி.தெற்கு பிரதேச செயலகம், உடுவில், முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி.மேற்கு பிரதேச செயலகம், சங்கானை - தற்போது ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாநிதி வ.முத்துக்குமாரசாமி (சிரேஷ்ட விரிவுரையாளர் பொறியியல் பீடம் பேராதனை, தற்போது ஆஸ்திரேலியா), திருமதி கௌரி ஆனந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ந.சீவரத்தினம், ந.கனகரத்தினம், காலஞ்சென்ற ந.கந்தசாமி மற்றும் திருமதி கு.சரஸ்வதி, திருமதி ந.கனகமணி, திருமதி இ.செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ச.குமாரசாமி, காலஞ்சென்ற பொ.நடராசா மற்றும் செ.இராசரத்தினம் (உரும்பிராய்), திருமதி சீ.பராசக்தி, திருமதி க.மணிமேகலை ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமிர்தாஞ்சன் (சுவிஸ்), துவாரகன், மோகனப்பிரியன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.09.2001) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக காட்டுப்புலம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*டச்சு வீதி,*
*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்.* (91957)

தகவல்:
கணவர்
அ.இராசரத்தினம்.

# வடக்கு, கிழக்கில் இரு அதிபர்கள் புதுடில்லி பயிற்சிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 6
சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகளின் கல்வி நிர்வாகிகள், அதிபர்கள் ஆகியோருக்கு புதுடில்லியில் உள்ள 'நீப்பா' (NIEPA) நிறுவனத்தில் பயிற்சி பெற வடகிழக்கு மாகாணத்திலிருந்து இரு அதிபர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறும் இப் பயிற்சிநெறியில் கலந்து கொள்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து 6 அதிபர்களும், ஏனைய 7 மாகாணங்களிலிருந்தும் தலா 5 அதிபர்கள் வீதம் 35 அதிபர்களுமாக 41 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட அதிபர்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் அதிபர்கள் தலா 2 பேர் வீதம் அடங்கியுள்ளனர். இவர்களில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செல்லமலர் சுந்தரேசன் மற்றும் மண்டூர் மகா வித்தியாலய அதிபர் ஆகிய இருவரும் இடம்பெற்றுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தெரிவான 6 அதிபர்களின் பெயர்களை மாகாணக் கல்வி அமைச்சு சிபார்சு செய்திருந்தது.

கல்வி அமைச்சின் இடைநிலைக்கல்வி நவீன மயப்படுத்தும் திட்டத்தின் கீழ் இப் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான பிரிவுச் செயலாளர் செய்துள்ளார். (க-173)

# பலாலி வீதியூடாக சந்நிதிக்கு வெள்ளி தோறும் பஸ் சேவை

வடமராட்சி, செப். 6
யாழ்ப்பாணம் பலாலி வீதியை அண்டிய இடங்களைச் சேர்ந்த பக்தர்களின் வசதி கருதி, பருத்தித்துறையிலிருந்து பலாலி வீதி ஊடாக (764 இலக்க) யாழ்ப்பாணத்துக்கு நடைபெறும் பஸ் சேவை வெள்ளி தோறும் தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஊடாக நடைபெறும்.

பிரதி வெள்ளி தோறும் காலை 8. 35 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் பஸ்ஸும் பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புறப்படும் பஸ்ஸுமே செல்வச் சந்நிதி ஊடாகச் சேவையில் ஈடுபடும் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க-173)

# பனை அபிவிருத்திச் சபையால் புழுக்கொடியல் கொள்வனவு

யாழ்ப்பாணம், செப். 6
தரமான ஒடியல் மற்றும் புழுக்கொடியல் போன்றவை பனை அபிவிருத்திச்சபையால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றைக் கையிருப்பில் வைத்திருப்போர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப் படுத்தும் பகுதியுடனோ அல்லது கண்டி வீதியிலுள்ள அச் சபையின் தலைமை அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை பனை கைப் பணிப்பொருள்களை சந்தைப் படுத்த விரும்புவோர் பனை அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொண்டால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்றும் விரைவில் கற்பகங்களினூடாக கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-ரி)

## கலந்துரையாடல்

வடமராட்சி, செப். 6
தென்மராட்சி சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புலோலியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறும். இதில் தென்மராட்சி சுகாதாரத் தொண்டர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-173)

## விஞ்ஞான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7 தொடக்கம் 11 வரை 'விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்' கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ். வலயக்கல்விப் பணிமனையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகள் யாழ். கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இதேவேளை ஏற்கனவே கொடுக்கப்பட்ட அறிவித்தலின்படி கோப்பாய் கோட்ட ஆசிரியர்கள் மேற்குறிப்பிடப்பட்ட இரு தினங்களிலும் கொத்தணி ரீதியாக இச்செயலமர்வுகளில் பங்குபற்றவேண்டுமென வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (க-ரி)

## கணித பாட விசேட வகுப்பு

தென்மராட்சி, செப். 6
தென்மராட்சி, கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாட விசேட வகுப்புகள் ஏழு நிலையங்களில் வார இறுதித் தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் பளை மத்திய கல்லூரி, கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் — இணுவிலில் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி — உரும்பிராயில் இயங்கும் நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகிய நிலையங்களில் நடத்தப்படும் விசேடவகுப்புகளில் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 6
யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் உயர் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (ச-4)

நாளை நாடாளுமன்றம் கூடும்போது

# கொள்கை விளக்கத்தைத் தவிர்க்க வெளிநாடு செல்வார் ஜனாதிபதி?

## 'ராவய' பத்திரிகை தகவல்

கொழும்பு, செப். 6
நாளை மீண்டும் கூட்டப்பட உள்ள நாடாளுமன்றத்திற்குச் சென்று கொள்கை விளக்கத்தை முன்வைப்பதைத் தவிர்க்கும் நோக்கில் ஜனாதிபதி வெளிநாடு செல்லக்கூடும் என சிங்கள நாளிதழான 'ராவய' தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வருவதாயின் கொள்கை விளக்கத்தை முன்வைப்பதற்கு மாத்திரமே வரவேண்டும் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்படும் கொள்கை விளக்கத்தை தேர்தலின்போது தமக்கு சாதகமாகப் பயன்படுத்த எதிர்க்கட்சிகள் காத்திருக்கின்றன எனவும் —

தற்போதைய நிலையில் கொள்கை விள்க்கத்தைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி நாடாளுமன்றம் செல்லக் கூடாது எனவும் —

ஜனாதிபதிக்கு மிக வேண்டியவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனராம்.

ஜனாதிபதி நாட்டிலிருந்து கொண்டு நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு செல்லாமல் விட்டால் மக்களின் ஏளனத்திற்கு ஆளாகலாம் என்பதால் விசேட காரணம் ஒன்றைத் தெரிவித்து வெளிநாடு செல்வதே பொருத்தமானது என அவர்கள் ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனராம்.

கொள்கை விளக்கத்தை வாசிக்கும் பொறுப்பு பெரும்பாலும் சபாநாயகரிடம் விடப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனவும் 'ராவய' பத்திரிகை தெரிவிக்கிறது. (ம)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 6
காரைநகர் மணிவாசகர் சபையின் 61 ஆவது பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சபை மணிமண்டபத்தில் நடைபெறும். (ம)

## பரீட்சகர்களின் பயணத் திகதிகள் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 6
ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடுவதற்காக கொழும்பு செல்லவுள்ள இரண்டாவது தொகுதி பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரின் பயணத் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு செல்வதற்காக அழைக்கப்பட்ட பிரதம பரீட்சகர்கள் முதல் நாளான 8 ஆம் திகதி சனிக்கிழமையும் —

11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அழைக்கப்பட்ட உதவிப் பரீட்சகர்கள் முதல் நாளான 10 ஆம் திகதி திங்கட்கிழமையும் பயணம் செய்ய வசதி செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## தொடர்ந்தும் விளக்கமறியலில்

தென்மராட்சி, செப். 6
பாலியல் வல்லுறவு, சிறையிலிருந்து தப்பியமை மற்றும் திருட்டு ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இளைஞன் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டான்.

சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் தமிழ் ஆயுதக் குழு ஒன்றின் உறுப்பினர் எனத் தெரியவந்துள்ளது. (க-117)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செப். 6
உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தவுள்ள ஆறுபேர் பங்குபற்றும் ஆறு பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இம் மாதம் 17 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-ரி)

## மாதகலில் புதிய சந்தை திறப்பு

வலி. தென்மேற்கு, செப். 6
மாதகல் பகுதியில் 4 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய சந்தையை வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன் கடந்த திங்கட்கிழமை திறந்துவைத்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி சந்தையின் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து வைத்தார். (ச-185)

வாகன இறக்குமதி விவகாரம்:

# அர்ஜுன ரணதுங்காவுக்கு துறைமுக நீதிவான் தண்டம்

கொழும்பு, செப். 6
சட்டவிரோதமான ஆவணங்களைச் சமர்ப்பித்து வாகனத்தின் பெறுமதியைக் குறைத்து சொகுசு மோட்டார் வாகனத்தை கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்த சிறிலங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்காவுக்கு கொழும்பு துறைமுக நீதிவான் 10 லட்சம் ரூபா தண்டம் விதித்துள்ளார்.

கடந்த காலங்களில் பல பிரச்சினைகளில் சிக்கியுள்ள அர்ஜுன ரணதுங்காவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்துச் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அவற்றைத் துருவித் துருவி ஆராய்ந்தபோது, சொகுசு வாகனத்தைத் துறைமுகத்தில் இருந்து குறைந்த வரி அறவீட்டுடன் எடுத்துச் செல்வதற்காகத் திட்டமிட்டு வாகனத்தின் பெறுமதியைக் குறைத்துத் தெரிவித்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கிடையில் இந்த விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அர்ஜுன ரணதுங்காவின் தந்தையான அமைச்சர் றெஜி ரணதுங்கா மேற்கொண்ட அழுத்தங்கள் காரணமாக விசாரணைகளை மேற்கொண்ட பிரதம சுங்க அதிகாரி வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இருப்பினும் முடிவில் சுங்க அதிகாரிகள் அர்ஜுன ரணதுங்காவுக்கு எதிராக கொழும்பு துறைமுக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிவான் அர்ஜுன ரணதுங்காவுக்கு 10 லட்சம் ரூபா தண்டம் விதித்துள்ளார். (ம)

# சமய சந்திகளில்

மல்லாகம் புதுமை மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கூட்டுத்திருப்பலியுடன் முடிவு பெறும். (க-17)

★ ★ ★

காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 30 மணி முதல் 8 மணி வரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகமும் தொடர்ந்து 8 மணி முதல் 9.15 மணி வரையுள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகமும் நடைபெறும். மாலை திருக்கல்யாணம் நடைபெற்று, சுவாமி வீதி உலா வருதலும் இடம் பெறும். (க-ரி)

★ ★ ★

குடத்தனை மாளிகைத்திடல் கண்ணகை அம்மன் கோயில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5-30 மணிக்கும் 6-30 மணிக்கும் இடையில் நடைபெறும்.

வரணி சுட்டிபுரம் அம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (க-173)

யாழ்ப்பாணம் அஞ்சனந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை, 16 ஆம் திகதி ஞாயிறு காலை திருநாள் திருப்பலி, திருச்சொரூபபவனி, சொரூப ஆசீர் என்பனவற்றுடன் விழா முடிவடையும். (சு)

★ ★ ★

இமையாணன், உடுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய பஞ்சகுண்டபக்ஷ கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறும்.

பால்காப்பும் எண்ணெய்க் காப்பும் சாத்துதல் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும். (ம)

★ ★ ★

ஆறுகால்மடம் ஞானவைரவர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (4)

உ

வண்ணார்பண்ணை காட்டுத்துறை

அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

## கும்பாபிஷேகம்

*காலம்:* இன்று (06.09.2001) வியாழக்கிழமை காலை 7.34 மணி - 08.09 மணிக்குள் வரும் சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து ஆசி உரை - மகாபிஷேகம் நிகழும். மாலை 5.00 மணி - பஞ்சமுக அர்ச்சனை, வீதி உலா உற்சவம்.

யாவரும் வந்து தரிசித்து அருள்பெறுக.

(C/18141) - ஆலய அறங்காவலர்கள்.





*வட்டுக்கோட்டை சங்கரத்தை*

*பிட்டியம்பதி திருவருள் மிகு*

ஸ்ரீவீரபத்திர சுவாமி சமேத

பத்திரகாளி அம்பாள்

தேவஸ்தானம் சம்புரோக்ஷண

நவ குண்ட பக்ஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான வஷ வருஷம் ஆவணி மாதம் 25ஆம் நாள் (10-09-2001) திங்கட்கிழமையும் அமிர்தயோகமும் சப்தமித்திதியும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய அதிகாலை 5.45 மணிமுதல் 6.05 மணி வரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தவேளையில், மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள்கூடி உள்ளது.

ஆவணி 21ஆம் நாள் இன்று (06-09-2001) வியாழக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி ஆவணி 23ஆம் நாள் (08-09-2001) சனிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 24ஆம் நாள் (09-09-2001) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

*கும்பாபிஷேக பிரதிஷ்டா குரு:-*

**வாமண சிவாசாரியார் சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜா குருக்கள்** *(பிரதமகுரு வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தானம், அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை, வலி.மேற்குப் பகுதித் தலைவர்)*

*சங்கரத்தை,* ஆலய அறங்காவலர்

*வட்டுக்கோட்டை.* (91961) அருளானந்தம் சந்திரசோதி.



இலங்கை மின்சார சபை

யாழ்.பிரதேசம்

### மின் தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்யவேண்டியுள்ளதால் 08.09.2001 சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பி.ப.06.00 மணிவரையும் யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளருக்கு அறியத்தருகின்றேன்.

வேலைகள் பூர்த்தியடைந்ததும் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக மின் வழங்கப்படும் என்பதனையும் பாவனையாளருக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காகவும் மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை.
யாழ்.பிரதேச அலுவலகம்,
*சுன்னாகம்.*

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை. (C-18139)



## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி ஆறுமுகம் சிற்றம்பலம்

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட, மனநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் சிற்றம்பலம் அவர்கள் செவ்வாய்க்கிழமை (04-09-2001) அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான பரமு - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா (ஓடிற்றர்), கனகசிங்கம் (வைத்தியகலாநிதி), இரத்தினம்மா, சரஸ்வதி, மாணிக்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரன், நகுலேஸ்வரன், கணேஸ்வரன், கேதீஸ்வரன், தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புஷ்பலதாவின் (லண்டன்) மாமனாரும், தாமோதரம்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் வீரசிங்கம்(கொழும்பு), முத்துக்குமாரசுவாமி(லண்டன்), தருமலிங்கம், விபுலானந்தன்(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், லண்டன் எழில்வாணி, கோபி, லட்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2001) வியாழக்கிழமை அவரது லண்டன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

லண்டன் முகவரி:-
18, WYCHERLY CRESCNT
HERTS, BARNET
EN5 1AR UK
T.P 00 44-208-440 4537 (91962)

தகவல்:
ப.தருமலிங்கம்(மைத்துனர்)
*156,பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*


## கண்ணாடி வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கைதடிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

கண்பாதிப்புக்குள்ளானவர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு பாதிப்புக்குள்ளானவர்களுக்கே கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய மண்டபத்தில் காலை 9 மணிக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் பேபிலிஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-31)

## வரணி மருந்தகத்தில் 'கிளினிக்'குகளும்!

சாவகச்சேரி,செப்.6

வரணி மத்திய (மருந்தகம்) - வைத்தியசாலையில் - சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மற்றும் அங்கு கர்ப்பிணிகளுக்கான 'கிளினிக்'குகளும் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் வரணி வைத்தியசாலை டாக்டர் எஸ்.ஆறுமுகம் தெரிவித்தார்.

பொதுமக்களின் நலன்கருதி நடமாடும் வைத்திய சேவை கொடிகாமம் - கச்சாய் வீதியிலுள்ள பிரதேச சபை அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருவதாகவும் அங்கு கெற்பலி, கச்சாய், அல்லாரை ஆகிய கிராமங்களிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்கள் பலர் வந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் கூறினார். (க-31)


### மருந்தாளர் தேவை

வலி.மேற்குப் பகுதியில் இயங்க இருக்கும் மருந்தகத்துக்கு பதிவுபெற்ற மருந்தாளர் தேவை.

தொடர்பு:-
விளம்பர இல. 1360,
மே/பா உதயன். (91965)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

நுண்கலைமாணி இசை/நடனம்

இசைக்கலைமணி/ நர்த்தியக்கலைமணி

பரீட்சைகள்

மேற்படி கற்கைநெறிகளின் மூன்றாம், நான்காம் வருடப் பரீட்சைகளுக்கான கால அட்டவணையை இசைத்துறை, நடனத்துறை, கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகைகளில் பார்வையிடலாம்.

மூன்றாம் வருடப் பரீட்சைகள் 14.09.2001இல் இருந்து ஆரம்பமாகும்.

பதிவாளர். 04.09.2001 (C/18137)


## கண்டல் மரங்கள் அழிப்பு!

வடமராட்சிகிழக்கு,செப்.6

வடமராட்சி கிழக்கில் கண்டல் மரங்கள் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

விறகுக்காகவும் பட்டைக்காகவும் இம்மரங்கள் கண்டபடி வெட்டி அழிக்கப்படுவதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

கண்டல் மரங்களை வெட்டி விறகு மற்றும் பட்டை போன்றவற்றை சிலர் விற்பனை செய்து வருவதாகவும் கூறப்பட்டது. (க-182)


## NEW SCIENCE COLLEGE JAFFNA

**PHYSICS**

*BY:* M.KARUNANITHY

**2002 A/L**

மின்னியல் SAT., SUN. - 3.00 - 4.00 p.m.

மின்புலம் SAT., SUN. - 7.00 - 8.00 a.m.

**2003 A/L**

ஒலியியல் (SOUND) SAT., SUN. - 6.00 - 7.00 a.m.

ஆரம்பம் : 08.09.2001 (91966)



## இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி

தோற்றம் 07 - 12 - 1981



மறைவு 30 - 08 - 1999

### அமரர் நடராஜா சிவாகரன்

*திதி:* 06.09.2001

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
ஆசைமுகத்துடன் எமையெல்லாம் அரவணைத்த
செல்வமே!
ஆண்டுகள்தான் ஓடிமறைந்திடினும் ஆறிடுமோ உன்
பிரிவுத்துயர்....

அன்னாரின் பிரிவால் துயருறும்:

*பூதர் வளவு,* அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
*அச்செழு.* (91967) மாமாமார், மாமிமார் மற்றும் உறவினர்கள்.



## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

### கைதடி சைவ ஐக்கிய சங்கம்

09-09-2001

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் 80ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 09-09-2001 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்புக்கள் விடுக்கப்படாத காரணத்தால் இடம்பெயர்ந்து வாழும் அங்கத்தவர்களும் கைதடியில் வதியும் ஏனைய அங்கத்தவர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கூட்டத்தில் தவறாது பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கைதடி* வ.சுப்பையா

(C/18140) தலைவர்



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

### மாட்டிறைச்சிக் கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல்.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 10.09.2001 பி.ப. 14.00 மணிவரை.
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 12.09.2001 நண்பகல் 12.00 மணிவரை.
குத்தகைக் காலம் : 15.09.2001 - 31.12.2001 வரை.
கேள்வி திறக்கப்படும் திகதி : 12.09.2001 பி.ப. 15.00 மணி.

**கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு. மேலதிக விவரங்களைத் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.**

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை. | கேள்விப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திர பணம்(ஜீ.எஸ்.ரி. (உட்பட) மீளளிக் கப்படாதது. |
|---|---|---|---|---|
| மாட்டிறைச்சிக்கடை வட்டுக்கோட்டை உபஅலுவலகம் | ரூ. 50.00 | ரூ10,000.00 | ரூ. 500.00 | ரூ. 225.00 |
| மாட்டிறைச்சிக்கடை சுழிபுரம் உப அலுவலகம் | ரூ. 50.00 | ரூ. 2,000.00 | ரூ. 500.00 | ரூ. 225.00 |

*வலிகாமம் மேற்கு பிரதேச சபை,*
*தலைமையலுவலகம்,*
*சுழிபுரம்.* (C/18138)

திரு.ந.திரிலோகநாதன், ஜே.பி.யூ.எம்,
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## ஜெயந்தினி பாலர் பாடசாலை திறப்பு விழா

அமரர் செல்வி **சி.ஜெயந்தினியின்** 6 ஆம் ஆண்டு நினைவாகவும் 18 ஆவது பிறந்த தின ஞாபகார்த்தமாகவும் அவரது பெற்றோர்களால் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தில் (பழநிகோவில் முன்பாக) அமைக்கப்பட்டுள்ள **இலவச பாலர் பாடசாலை** இன்று (06.09.2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

*தலைவர்:-* திரு.க.சிவாஜி,
அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

*பிரதம விருந்தினர்:-* ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

*சிறப்பு விருந்தினர்:-* திரு.க.கமலசேகரன் (பாபு)
ஜே.பி.யூ.எம்.
(தலைவர், வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்)

*மேலும் பல பெரியோர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்கள்.*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

ஐ.சிவபாதசுந்தரம் (பச்சை-தந்தை)
சி.இந்திராதேவி (தாய்)
சி.மயூரன் (சகோதரன்)

*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*சுன்னாகம்.*
(C/18144)

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பொருளியற் கல்லூரி - யாழ்., இணுவில், சுண்டுக்குளி ஆகிய நிறுவனங்களில் கல்வி கற்ற 2001, Day ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பொருளியல் மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 10.09.2001 திங்கள் காலை 9 மணிக்கு யாழ்.பொருளியற் கல்லூரிக்கு சமுகம் தருமாறு அழைக்கின்றோம்.

**இயக்குநர்,**
பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(91950)

## கரவெட்டியில் ரவீன்ஸ் ரெலிகொம்

- G.C.E. O/L 2001 (புதிய பாடத்திட்டம்) கொழும்பு காயத்திரி பப்ளிக்கேசனின் மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) தொடர் வெளியீடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- "இன்ரநெற்" மூலம் வெளிநாடுகளுக்கான குறைந்த கட்டண தொலைபேசி அழைப்புகள் (Foreign Calls) கட்டணம் ரூபா 40/= (நிமிடமொன்றுக்கு) வழங்கப்படுகின்றது.

ரவீன்ஸ் ரெலிகொம்,
சிங்கத்தின் வீடு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(91963)
T.P., Fax No:- 070 212 408
E mail: raveens @ slt net.lk

## 25ஆவது திருமண வாழ்த்து



**மதுரநாயகம் - தங்கமணி தம்பதிகள்**

திருமண வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் எம் பெற்றோரை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

*குருநகர்.* (91977) - றெமி, சுஜா.

J.M.J.

## 25 ஆவது திருமண வாழ்த்து



இருமனம் கலந்த
திருமண வாழ்வுதனில்
இருபத்தைந்தாம் ஆண்டின்
இனிய நிறைவுதனை
இனிய தம்பதியினர்
எம் மாமா மதுரநாயகம்
அன்ரி தங்கமணி
இன்பமுடன் என்றுமே
நீடூழி வாழ...

**மதுரநாயகம் - தங்கமணி தம்பதிகள்**

இனிதுடன் வாழ்த்தும்
நிக்சன், மலர், துசிக்குட்டி.

*குருநகர்.* (91976)

## விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்கள் - யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து ஐந்து வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை செல்லாத மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த உள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதியும் பல இடங்களிலும் இக்கருத்தரங்குகள் நடத்தப்படும். போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ள செப்.22, ஒக்.20 ஆகிய தினங்களுக்கு முதல் வரும் திகதிகளில் நடத்தப்படவுள்ளதாக லயன் எஸ். அருளானந்தன் தெரிவித்தார்.

(ஐ-31)

## கிருஷ்ண ஜெயந்தி

வடமராட்சி கிழக்கு,செப்.6

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பகலும் இரவும் பூசைகளும், விசேட ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

10 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு பெருமாள் வெளிவீதி உலா வருவார். அப்போது வடக்கு வீதியில் கண்ணனின் வெண்ணெய் திருடும் திருவிழாவான உறியடி உற்சவம் இடம்பெறும்.

(ம-182)

## தேவை

புடைவை வியாபாரத்தில் நன்கு அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை.

*தொடர்பு:-*
மாருதி ரெக்ஸ்
*இல.1, பஜார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.3080
(C/18150)

## ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்

சரத்குமார், அபிராமி, முரளி நடிப்பில்
**சமுத்திரம்**
புதிய வெளியீடு CD பிரதி
தினசரி 10.15, 2.30(ப.நே.)
(C/18147)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த
**டும் டும் டும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91965)

## ராஜா யாழ்ப்பாணம்

அஜித், ஜோதிகா நடிப்பில்
**முகவரி**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/18074)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 12 1929 மறைவு 30 08 1999

## அமரர் கணபதி கந்தையா
(கட்டட ஒப்பந்தகாரரும், மகா யோக மாளிகை உரிமையாளரும்)

திதி:- 06-09-2001

*பாசத்தின் உறைவிடமாய்*
*பண்பின் சிகரமாய்*
*பாங்குடனே பலருக்கு உதவி பல புரிந்து*
*பரகதி அடைந்த –*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதீப் தொலைத்தொடர்பு சேவை,*
*சங்கானை.*
*தொ.பே.இல.: 070-212419*

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(91945)

## கண்ணீர் அஞ்சலி

எமது நீண்டகால நிர்வாக உறுப்பினரும் எமது அமைப்பின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருபவருமாகிய பிரம்மஸ்ரீ பா.நகுலேஸ்வரசர்மா அவர்களின்

**அன்புத் தாயார் திருமதி பா.சீதாலக்சுமி அம்மாள்**

நேற்று (05.09.2001) புதன்கிழமை காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.
(91973)

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையினரின்

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையைச் சேர்ந்த

**கார்த்திகேசு யோகேந்திரன் (யோகர்)**

(பயண முகவர் - சவூதிஅரேபியா, பொறியியலாளர் - சவூதிஅரேபியா)

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக நன்றி வழிபாடு நாளை (2001.09.07) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் எம் ஆலயத்தில் நடைபெறும்.

*தென்னிந்திய திருச்சபை,*
*நெடுந்தீவு.*
(C/18146)
சபை ஊழியனும்
சபை மக்களும்.

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு யோகேந்திரன்

(யோகர் - பயணமுகவர், சவூதிஅரேபியா,
பொறியியலாளர், சவூதிஅரேபியா)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகேந்திரன் நேற்றுமுன்தினம் (04-09-2001) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி குமாரசாமி (உடையார்), தம்பதிகளின் அன்புப் பெறாமகனும், சுலோசனாவின் (இந்தியா) அன்புக் கணவரும், குட்டி (இந்தியா), சுதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கா.குலேந்திரன், திருமதி சரோஜினி திருநாவுக்கரசு (திருச்சி), திருமதி ருக்மணிதேவி சிவானந்தம் (திருச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருநாவுக்கரசு (சவூதி), சிவானந்தன் (ஓமான்), சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (07-09-2001) வெள்ளிக் கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு:-* அன்னாரின் மறைவு குறித்த நன்றி செலுத்தும் ஆராதனை நாளை (07.09.2001) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபையில் இடம்பெறும்.

தகவல்:
புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் ஜே.பி.யூ.எம்.
(மைத்துனர்)
(தலைவர்,பிரதேச சபை, நெடுந்தீவு)

கொழும்பு முகவரி:
*579/1, காலி வீதி,*
*வெள்ளவத்தை.*
(C/18145)

### உருக்குமணி சுப்பிரமணியம்

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட உருக்குமணி சுப்பிரமணியம் நேற்று (05-09-2001) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் வி.சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், தயானந்தசோதி, சிவானந்தசோதி, தயாவதி, கருணாவதி, ஆனந்தசோதி, கலாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராதேவி, சிவபாக்கியம், வெற்றிவேலு, கமலேஸ்வரன், சாந்தினி, ஈசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி முத்துப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவிலில் உள்ள தற்போதைய வதிவிடத்தில் நேற்று (05-09-2001) 5.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வேம்படி முருகமூர்த்தி கோயிலடி,*
*பத்தானை வீதி,*
*தாவடி தெற்கு, கொக்குவில்.*
(91980)

தகவல்:
சு.தயானந்தசோதி
(மகன்)

# பிரபாவைச் சந்திக்க கொத்தலாவ முயற்சி!

கொழும்பு,செப்.6

சிநேகத்திற்கும் புரிந்துணர்வுக்குமான அமைப்பின் தலைவர் தேசமானி லலித் கொத்தலாவ சமாதானத்தை .ஏற்படுத்த பேச்சுக்களில் ஈடுபடுமாறு வலியுறுத்தி அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

வே.பிரபாகரனுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் அவரை நேரில் சந்தித்துத் தான் பேசவிரும்புவதாகவும் -

அதற்கு இணக்கம் தெரிவித்தால் எங்கு, எப்போது சந்தித்துப் பேசுவது என்ற விவரங்களைத் தனக்கு அறியத்தருமாறும் -

லலித் கொத்தலாவ தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் கிடைக்கக்கூடிய வகையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்குரிய சாதகமான பதிலைத் தாங்கள் தரவேண்டும்" என்றும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்திலும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். (ம)

## புறக்கோட்டை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் -

அந்த இடத்துக்கு விரைந்த பொலீஸார் அமைச்சரிடம் இருந்து வர்த்தகரைக் காப்பாற்றி அமைச்சரை அங்கிருந்து அப்புறப்படுத்தியதாகவும் -

புறக்கோட்டை வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம)

## உணர்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உறுப்பினர்களையும் நினைந்து உணர்ச்சி மேலிட்டவர்களாக அவர்கள் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமது கணவர் விஜேகுமாரதுங்கவைக் கொன்றது ஜே.வி.பியே என்று இதுவரை காலமும் குற்றஞ்சாட்டி வந்ததும் -

இப்போது தமது அரசைத் தக்க வைப்பதற்கு அந்தக் கட்சியோடு அவர் உடன்பாடு செய்து கொண்டிருப்பதும் - குறிப்பிடத்தக்கவையாகும். (உ)

## வழக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சங்களை இந்தியாவில் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்திய பரிசோதனை அறிக்கைகள் என்பனவற்றை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கும்படி குற்றப் புலனாய்வுப் பொலீஸார் நீதிவானிடம் கோரினர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிவான், அடுத்த மாதம் 30ஆம் திகதி இந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டார்.

(க-3)

## 13 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தனர். இவர்களில் 38 பேர் இரு தடவைகளில் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படையினரால் நடுக்கடலில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

எஞ்சியிருந்த 13 பேரையுமே விடுவிக்குமாறு தற்போது சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

மனவர்களை விடுவிப்பதற்கு வசதியாக காங்கேசன்துறை கடற்படைத் தளபதி, காரைநகர் கடற்படைத் தளகட்டளை அதிகாரி, ஊர்காவற்றுறை பொலீஸ் அதிகாரி ஆகியோரை எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.(ம)

## அமைச்சர்களை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே மிகுதியாக உள்ள 12 அமைச்சர் பதவிகளையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளவர்களுக்கு வழங்கமுடியும். இதனால் யாரைத் தெரிவுசெய்வது, யாரை விடுவது என்பதில் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை -

அமைச்சர் பதவிகளை இழக்க இருக்கும் 24 பேரில் 15 முதல் 17 பேர் பிரதி அமைச்சர் பதவிகளைப் பெறுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆளுங்கட்சித் தகவல்களின்படி தற்போதைய பிரதி அமைச்சர்கள் எவருக்கும் மீள் நியமனம் கிடைக்காது.

இதற்கிடையில் -

அமைச்சர் அனுருத்த ரத்வத்தை வசமுள்ள பிரதிப் பாதுகாப்புத்துறை அமைச்சு, எரிபொருள் மின் சக்தித் துறை அமைச்சு என்பவற்றில் ஒன்று மீளப்பெறப்படவுள்ளதாகவும் -

எந்த அமைச்சுப் பதவியில் நீடிக்க அவருக்கு விருப்பம் என்று அவரிடம் கேட்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## சாட்சிகளின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொ.ஐ.முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜயரத்னவும், ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவும் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் பிரதிகளை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்து நேற்று மாலை 4 மணிக்கு பத்திரிகையாளர்கள் மற்றும் பிரமுகர்கள் முன்னிலையில் பரிமாறிக்கொண்டனர்.

சாட்சியாக அழைத்த பிரமுகர்களை விட்டுவிட்டு, இரகசியமாக உடன்பாடு கைச்சாத்தானது ஏன் என்று தெரிவிக்கப்படவில்லை.

ஒப்பந்தத்தின் பிரதிகளை பத்திரிகையாளர்கள் கோரியபோது, அவற்றின் தமிழ் - சிங்கள் மொழி பெயர்ப்புகள் தயாராகவில்லை என்பதால் பிரதி பின்னர் பத்திரிகையாளர்களுக்குக் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் நேற்று முன்னிரவு வரை அது பத்திரி கையாளர்களின் கைகளுக்குக் கிடைக்கவில்லை.

பண்டாரநாயக்கா மண்டப நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்த - மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த - பிக்கு ஒருவர் "நாங்கள் இங்கு வெறுமனே பிரித் ஓத மட்டுமே அழைக்கப்பட்டிருக்கின்றோம் போல் தெரிகின்றது" - என்று குறிப்பிட்டார்.

(உ)

## ஒப்பந்தத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்துச்செய்தல்.

★ 'தகுதி காண் அரசின்' ஒரு வருடகால ஆட்சிக்காலத்தில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கும் ஒப்பந்தமோ, நடவடிக்கைகளோ புதிதாகச் செய்யப்படக்கூடாது.

★ இக்காலத்தில் தனியார் மயப்படுத்தலை மேற்கொள்ளக்கூடாது.

★ அதிகாரப் பரவலாக்கல், அதற்கான அரசமைப்பு மாற்றம் தொடர்பாக அரசு பேச்சுக்களோ, நடவடிக்கைகளோ மேற்கொள்ளுதல் ஆகாது.

- இவை உட்பட ஜே.வி.பியினால் முன்வைக்கப்பட்ட 27 நிபந்தனைகளில் 25 நிபந்தனைகளை அரசு ஏற்றுக்கொள்வதாக இந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டுள்ளது. (உ)

## விவசாயக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயக் கடன்களையும் உடனடியாக ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தர விட்டுள்ளார் என இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

வீட்டுக் கடன், விவசாயக் கடன், நகைகளுக்கான அடகுக் கடன் ஆகியவற்றுக்கான கட்டணங்களையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க அவர் உத்தரவிட்டிருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்தது. (உ)


JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
SHORT COURSE IN AGRICULTURE
குறுகிய கால விவசாய போதனா சாதனா பயிற்சிநெறி

4 மாத கால விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம ஆகிய துறைகளை உள்ளடக்கிய இலவசப் பயிற்சிநெறிக்கு க.பொ.த. சாதாரண தரம் கல்வி கற்ற 16 - 26 வயதிற்கிடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சிநெறி காலத்தில் நாளொன்றுக்கு 40 ரூபா வீதம் உதவுதொகை வழங்கப்படும். தமிழ்மொழி மூலம் கணனிப்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சிநெறியில் சேர விரும்புவோர் 14.09.2001 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:-
அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
(91972)



சுந்தர் வெளியீடு
38, கோயில் வீதி யாழ்ப்பாணம்
பரீட்சை நிலையம்
தரம் 4 இல் உள்ள-புலமைப் பரிசில் பரீட்சை 2002 இற்குரிய மாணவர்க்கானது.
1ஆவது பரீட்சை
09-09-2001ஞாயிறு காலை 9 மணி.
விவரம்:- அலுவலகத்தில்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
(91978) - சுந்தர்.



பொருளியல்
S.ஜெயகுமார்
B.A (HONS) ECO. (SPL.)
A/L 2003
"பேரினப் பொருளாதாரம்"
ஆரம்பம்:- 08.09.2001
சனி காலை
11 மணி (ப.நே.)
A/L 2002
PAPER CLASS
திகழ் கல்வி நிறுவனம்
(C/18143) இணுவில்.



BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
O/L பழைய புதிய பாடத்திட்டத்துக்கான
☆ அலகு ரீதியான மீட்டல்
☆ வினாவிடை வகுப்புகள்
ஆரம்பம்: 8-9-2001 சனி 8.30 a.m.
(91877)



எமது புதிய வீடியோ CD வெளியீடு
சமுத்திரம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/18151)



எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார், முரளி நடித்த
சமுத்திரம்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ K.K.S. றோட், கோண்டாவில்
(91974)



எமது புதிய வீடியோ CD வெளியீடு
சரத்குமார், முரளி நடிப்பில்
சமுத்திரம்
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/18149)



BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
M.A. HARI
ஆரம்பம் நாளை 8.00 a.m.
(91877)



IBMS இன் புலமைப்பரிசில் 2001/2002
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த IBMS இன் புலமைப்பரிசில் 2001/2002 பற்றிய முழு விவரங்கள் அடங்கிய பிரசுரம் சனிக்கிழமை உதயனில் இலவச இணைப்பாக வெளிவருகின்றது.
(C/18142)



முக்கிய அறிவித்தல்
எமது அங்கத்தவர்களில் (ஆண்கள் மாத்திரம்) இன்று 06-09-2001. சென்ற கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு 10.00 - 12.00 மணிக்கும் இடையில் சமுகம் தரவும்.
க.தயாபரன்
தலைவர், பட்டதாரிகளான பயிலுநர் (தகுதிகாண்) ஆசிரியர் சங்கம்.
(91971)



அறிவித்தல்
புது ஊர் நாகதம்பிரான் ஆலயத் திருப்பணி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தீபாவளித்தினத்தன்று (14.11.2001) இடம்பெற இருந்தது. அச்சீட்டிழுப்பானது எதிர்வரும் (05.10.2001) அன்று நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (91925)
இ.சந்திரன்,
உரிமையாளர்.



A/L பரீட்சைக்குத் தோற்றிய 1000 மாணவர்களுக்கு
80% புலமைப்பரிசில்
போட்டிப் பரீட்சையின்றி முதல் 1000 மாணவர்களுக்கு இப் புலமைப்பரிசில் வழங்கப்படும். இவர்கள் 12-09-2001 ஆம் திகதிக்கு முன்னர் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ளல்வேண்டும்.
ஏனையோர் பின்பு நடைபெறும் போட்டிப்பரீட்சைக்காக 15-09-2001 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை மேற்கொள்ளவும்.
(இவர்களுக்கு 100%, 75%, 50% புலமைப்பரிசில் வழங்கப்படும்)
UNIVAC College of Computer Information Technology
Head Office K.K.S. Road, Jaffna.
Branches Atchuvely / Chankanai / Uduvil.

நாம் தெரிவு செய்யும் நிறுவனம்!
சர்வதேச அங்கீகாரம் பெற்றதா?
குறைந்த கட்டணத்தில் பாடத்திட்டம் விரிவாக, முழுமையாக பூர்த்தி செய்யப்படுகின்றதா?
அல்லது மேலோட்டமாக கட்டணத்திற்கு ஏற்ப கற்பிக்கப்படுகிறதா?
என்பதனை மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். (எமது நிறுவனத்தில் பயிற்சி நெறிகளுக்குரிய விரிவான பாடத்திட்டத்தினை மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம்)
Director,
UNIVAC.
(91975)



SPOKEN ENGLISH
WITH GRAMMAR
LECTURES BY:- MR. M.A. HARI
★ புதிய பிரிவு ஆரம்பம் ★
09-09-2001 ஞாயிறு காலை 8 மணி.
SUNDAY SATURDAY } 8 a.m. - 9 a.m.
அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்
DIRECTOR
HARY'S INSTITUTE
KONDAVIL EAST KONDAVIL
(91970)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.